பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆனி 18 வியாழக்கிழமை (03-07-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:218

# போர் நிறுத்த மீறல்களைத் தடுத்து நிறுத்த திராணியற்ற நிலையில் கண்காணிப்புக்குழு

## 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை குற்றச்சாட்டு

கிளிநொச்சி,ஜூலை3

போர் ஓய்வைக் கண்காணித்து சமாதான சூழலை வளர்த்தெடுக்கும் இலக்குடன் பணியாற்ற வந்த வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழு, படையினரின் யுத்தநிறுத்த மீறல்களைத் தடுத்து நிறுத்தும் திராணியற்றிருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ பத்திரிகையான 'விடுதலைப் புலிகள்' ஏடு இவ்வாறு தெரிவித்திருக்கின்றது.

நேற்று வெளியான அந்த ஏட்டின் மே-ஜூன் மாதங்களுக்கான பதிப்பில் ஆசிரிய தலையங்கத்தில் இவ்வாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அநேகமான யுத்தநிறுத்த மீறல் சம்பவங்கள் புலிகளைச் சீண்டி சண்டைக்கு இழுக்கும் உள்நோக்கத்துடன் செய்யப்படுகின்றன. சமாதானச் சூழலை முறித்து போர்ச் சூழலை உண்டு பண்ண சிங்களப் பேரினவாதிகள் விரும்புகின்றனர். ஒருபுறம் போர் நிறுத்த மீறல்களை ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் தூண்டியும் தானே முன்னின்று நடத்தியும் வருகின்றார். மறுபுறம் இத்தகைய மீறல் நடவடிக்கைக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் வெறும் பார்வையாளனின் மன நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு உள்ளது. சிங்களத்தின் இந்த அரசியல் யதார்த்தம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை அர்த்தமற்றதொன்றாக மாற்றி வருகின்றது.

இதேவேளை, போர் ஓய்வைக் கண்காணித்து சமாதான சூழலை வளர்த்தெடுக்கும் இலக்குடன் பணியாற்ற வந்த வெளிநாட்டுக் கண்காணிப்பாளர் குழுவினரும் படையினரின் போர் நிறுத்த மீறல்களைத் தடுத்து நிறுத்தும் திராணியற்றிருக்கின்றனர். எல்லாம் நடந்துமுடிந்த பின்னர் பத்திரிகையாளர்களை சம்பவ இடத்திற்கு அழைத்துச் செய்தி கூறுவது போல போர்நிறுத்த கண்காணிப்பாளர்களை சிங்களப் படைகள் நடத்துகின்றன. கடலில் சிங்களப் படைகள் அடுத்தடுத்து நடத்தி வரும் அடாவடித்தனங்கள் புலிகளது பொறுமையை அளவுக்கதிகமாக சோதித்துவிட்டன. சர்வதேசக் கடல் வழியே பொருள்களை

(14ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு

# அரசின் புதிய வரைவுடன் வெஸ்ட்பேர்க் அடுத்த வாரம் கிளிநொச்சிக்கு செல்வார்

## அதற்கிடையில் அன்ரன் பாலசிங்கத்துடன் தமிழ்ச்செல்வன் நேரில் கலந்தாலோசனை

கொழும்பு,ஜூலை3

**நோர்வே அரசின் விசேட பிரதிநிதி (முன்னாள் இலங்கைத் தூதுவர்) ஜோன் வெஸ்ட்பேர்க் இலங்கை அரசு தயாரிக்கும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வரைவுடன் அடுத்த வாரம் கிளிநொச்சி சென்று அரசுக்கும் புலிகளுக்குமிடையே மீண்டும் பேச்சுக்கள் தொடங்குவதற்கு அத்திவாரமிடுவார் என்று எதிர்பாக்கப்படுகிறது.**

**அதற்கிடையில், புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இந்த விடயம் தொடர்பாக மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துடன் நேரில் கலந்தாலோசனை நடத்த இருக்கிறார். லண்டனிலா அல்லது கிளிநொச்சியிலா இக்கலந்தாலோசனை என்பது இன்னும் முடிவாகவில்லை என்று அறியவருகிறது.**

தற்சமயம் இலங்கை வந்திருக்கும் வெஸ்ட்பேர்க், சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கச்செய்யும் வழிவகைகள் குறித்து அரசாங்கத் தலைவர்கள் பலருடன் பேச்சு நடத்தியிருக்கிறார் என்று நோர்வே தூதரக வட்டாரங்கள் மூலம் அறியப்படுகிறது.

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கச் செய்வதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்வதே ஜோன் வெஸ்ட்பேர்க்கின் தற்போதைய வருகையின் முக்கிய நோக்கமாகும்.

கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்தும் அவர், வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் பற்றிய யோசனை குறித்தும் ஆராய்வார் எனத் தெரிகிறது.

விடுதலைப் புலிகள் கோரும் இடைக்கால நிர்வாக யோசனை குறித்து அரசாங்கம் இன்னமும் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளவில்லை.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு குறித்த திட்டத்தை வரைவதில் அரசாங்கம் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

இத்திட்டம் பூர்த்தியானதும் விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்

(14ஆம் பக்கம் பார்க்க)

## குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த பொலீஸின் சைக்கிள் ரோந்து திட்டம்

### கொழும்பில் இன்று முதல் அமுல்

கொழும்பு,ஜூலை3

குற்றச்செயல்களைத் தடுப்பதற்காக கொழும்பில் பொலீஸாரை இரவு நேரங்களில் சைக்கிள் ரோந்தில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் கொழும்புப் பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதி பொலீஸ்மா அதிபர் போதிலியனகேயின் ஆலோசனையின்பேரில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சைக்கிள் ரோந்துத் திட்டம் தொடர்பாக பிரதி பொலீஸ்மா அதிபர் போதிலியனகே கூறியதாவது :-

இரவுநேரங்களில் வழிப்பறி, வீடுடைப்பு மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களைக் கைது செய்வதற்காகவும், பொதுமக்களுக்குத் தெரியும் வண்ணம் மக்களின் நம்பிக்கையைப் பொலீஸார் வெல்வதற்காகவும் இந்த சைக்கிள் ரோந்துத திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்புப் பிரதேச பொலீஸ் நிலையங்கள் அனைத்திற்கும் ஒரு பொலீஸ் நிலையத்திற்கு 5 சைக்கிள்கள் வீதம் வழங்கப்படும். இவர்கள் குழுவாக தமது பிரதேசத்தில் ரோந்துப் பணியில் ஈடுபடுவர்.

இந்த ரோந்து சேவை பரீட்சார்த்தமாக கிருலப்பனை, பம்பலப்பிட்டி, நாரஹேன்பிட்டி ஆகிய பொலீஸ்

(14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கரும்புலிகள் ஊர்திப்பவனி

வவுனியா,ஜூலை3

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் இன்று 240 கரும்புலிகளின் உருவப் படங்களைத் தாங்கிய ஊர்திப்பவனி இடம்பெறவுள்ளது.

வவுனியா நகரப் பகுதியில் இருந்து இன்று காலை ஆரம்பமாகும் ஊர்திப் பவனி வவுனியா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் ஊர்வலமாகச் சென்று நிறைவு பெறும்.

இதற்கிடையில், கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு, வவுனியா மாவட்

(14ஆம் பக்கம் பார்க்க)

## தாப்ரூ கொலைக்கும் எமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை!

### அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை3

தெஹிவளை பொலீஸ் நிலையக் குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி தாப்ரூ கொலைச் சம்பவத்துக்கும் எமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கும் சக்திகளே இதற்குக் காரணம் என்று புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:-

சனில் தாப்ரூ கொலைசெய்யப்பட்டது அவரது உளவாளியால் என்பது சகலருக்கும் தெரிந்த விடயம். அவரைக் கொலை செய்தவர் எனக் கூறப்படும் நபர் அவருடன் நீண்ட

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வுப் பிரிவின் முன்னாள் உறுப்பினரை காணவில்லை

மட்டக்களப்பு,ஜூலை3

மட்டக்களப்பு இராணுவ புலனாய்வுப் பிரிவின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் கடந்த மாதம் முதல் காணாமற்போயுள்ளார் என்று அவரது மனைவி மட்டக்களப்பு மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்திருக்கிறார்.

இவர் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலகி இராணுவப் புலனாய்வுப்பிரிவில் கோப்ரலாக பதவி வகித்தவர் எனவும் - பின்னர் அதிலிருந்து விலகி டுபாய்க்குச் சென்றுவிட்டு அண்மையிலேயே நாடு திரும்பியிருந்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(ஐ-4-12)

## கொலைக் குற்றவாளிகள் 3 பேருக்கு மரணதண்டனை

### அம்பாறை நீதிமன்று விதித்தது

மட்டக்களப்பு,ஜூலை3

மட்டக்களப்பு மாவட்டம் அக்கரைப்பற்று தைபா நகரில் கடந்த 1991ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலைச்சம்பவம் தொடர்பாக குற்றவாளிகள் மூவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.டி.ஆ.எம்.பெரேரா இத்தண்டனையை வழங்கினார்.

கடந்த 1991ஆம் ஆண்டு தைபா நகரில் அட்டாளைச் சேனையைச் சேர்ந்த மொகமட் கனீபா என்ற நபர் படுகொலை செய்யப்பட்டார். இவரது கொலை தொடர்பாக சந்தேகத்தின்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 வீதியோரம் கண்ணிகளை அகற்ற 'ஹலோ ட்ரஸ்ற்' உதவும்

பளை முதல் முகமாலை வரையான ஏ-9 வீதியின் இருமருங்கிலும் உள்ள வெடிபொருள்களை துரிதமாக அகற்றும் பொருட்டு மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவுடன் இணைந்து ஹலோ ட்ரஸ்ற் கண்ணிவெடி அகற்றும் நிறுவனமும் ஈடுபடவுள்ளது.

மனித நேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவினால் வெடிபொருள்கள் உள்ளதாக இனங்காணப்பட்ட இடங்களில் 10 இடங்களைத் துப்புரவு செய்யும் பணியில் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவுக்கு ஹலோ ட்ரஸ்ற் உதவவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றும் பணியில் ஹலோ ட்ரஸ்ற் நிறுவனம் ஈடுபட்டு வருகின்றமை தெரிந்ததே.

(ஐ-8-12)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## எமக்குச் சொந்தமான காணியில்

# நாம் ஐஸ்தொழிற்சாலை அமைப்பதை தடுக்கும் அருகதை எவருக்குமில்லை

## தடுத்தால் எதிர்ப்போம் என்கிறார் சமாசத் தலைவர்

யாழ்ப்பாணம்,ஜூலை3

யாழ். முதலாம் குறுக்கு வீதியிலுள்ள வடமாகாண கடற்றொழிலாளர் சமாசத்துக்குச் சொந்தமான காணியிலேயே ஐஸ் தொழிற்சாலை அமைக்கப்படும். அதனை தடுக்கும் அருகதை எவருக்கும் இல்லை. மீறி, தடுக்க முற்பட்டால் எதிர்க்கவும் தயங்கமாட்டோம்.

- இவ்வாறு உறுதிபடக் கூறினார் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம்.

ஐஸ் தொழிற்சாலையை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள சமாசத்தின் காணி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ளதாகவும் -

அதனால் வடகடல் நிறுவன இறங்குதுறைப் பகுதியில் ஐஸ்தொழிற்சாலையை அமைக்கும்படியும் - இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டபோதே கடற்றொழில் சமாசத் தலைவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். முதலாம் குறுக்கு வீதியிலுள்ள கடற்றொழில் சமாசத்துக்குச சொந்தமான காணியில் ஐஸ் தொழிற்சாலையை அமைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் அனுமதி வழங்கியிருந்தது. அதன் அடிப்படையில் எமது சமாசம், அங்கு வேலைகளை ஆரம்பித்திருந்தது. ஐஸ் தொழிற்சாலை அமைப்பதற்காக சுமார் 10 லட்சம் ரூபா செலவில் வேலைத்திட்டங்கள் அங்கு மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில், திடீரென யாழ். படைகளின் தளபதி வேலைத் திட்டங்களை இடைநிறுத்த உத்தரவிட்டார். இப்போது, வடகடல் நிறுவனப்பகுதியில் ஐஸ் தொழிற்சாலையை அமைக்கும்படி ஆலோசனை கூறுகிறார்கள். அப்பகுதியில் போதிய நல்ல தண்ணீர் வசதி இல்லை. அது எமக்குச் சொந்தமான காணியும் அல்ல. வடகடல் நிறுவனப் பகுதியில் ஐஸ் தொழிற்சாலையை அமைப்பதனால் எமக்கு உற்பத்திச் செலவு அதிகரிக்க வாய்ப்பு உண்டு.

எமது காணியில், நாம் தொழிற்சாலை அமைப்பதை தடைசெய்ய யாருக்கும் அருகதை இல்லை. தற்போதைய சமாதான காலத்திலும், பொருத்தமற்ற காரணங்களைக் கூறிக்கொண்டு படைத்தரப்பு செயற்படுவதானது முரண்பாடுகளை உருவாக்கவே வழிவகுக்கும். இதுதொடர்பில் மீனவர் சமூகம் கடும் விசனமடைந்துள்ளது. எதிர்ப்புப் போராட்டங்களை நடத்துவதற்கான முஸ்தீபுகளையும் அவர்கள் மேற் கொண்டுள்ளனர் - இப்படி எஸ்.தவரட்ணம் கூறினார்.

(ஒ-9-ரி)

## கலைஞர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை3

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் கலை ஆர்வலர்களுக்கான முக்கிய கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வருடாந்த சாகித்திய விழா நடத்துதல், கலைஞர் கௌரவிப்பு மற்றும் பல்வேறு விடயங்கள் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளன என்றும் -

சம்பந்தப்பட்ட அனைவரையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறும் உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ்.செல்வநாயகம் கேட்டுள்ளார்.

(எ)

# யாழ்.பெருமாள் கோயில் மஹா கும்பாபிஷேகம்

## எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஜூலை3

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ உத்தம மஹாயாக மாஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.29 தொடக்கம் 10.53 வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறும்.

கும்பாபிஷேகக் கிரியைகள் நேற்று புதன்கிழமை ஆரம்பமாகின. எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு ஆரம்பமாகி மறுநாள் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவுபெறும்.

9ஆம் திகதி புதன்கிழமை புண்யாக வாசனம், பூதசுத்தி, வேதஸ்தோத்திர ஆசீர்வாத திருவாய்மொழி பாராயணம், ஆச்சார்யபூஷணம் என்பன இடம்பெறும் மறுநாள் வியாழக்கிழமை காலை 9.29 தொடக்கம் 10.53 மணி வரையுள்ள சுபநேரத்தில் கும்பாபிஷேகம் நடைபெறும்.

சிவாகம கிரியாதத்துவநிதி பிரம்மஸ்ரீ சாமிரட்ண சுந்தரேசக் குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்திவைப்பார்.

கும்பாபிஷேகத்தினத்தன்று சமயத் தலைவர்களின் ஆசியுரை இடம்பெறும்.

(எ)

## ஒன்றுகூடுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை3

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் வருட பொதுக்கலை மாணவர்களை இன்று பிற்பகல் 4 மணிக்கு பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயம் முன்பாக ஒன்றுகூடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(எ-4)

## மோ.சைக்கிள் விபத்தில் இளைஞர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஜூலை3

வீதியால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் திடீரென வேகக் கட்டுப்பாட்டை இழந்ததினால் அருகில் உள்ள மதிலுடன் மோதியதில் அதனை ஓட்டி வந்த இளைஞர் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தில் மல்லாகம் நீதிமன்ற வதியைச் சேர்ந்த தனபாலசிங்கம் தனுசன் (வயது 19) என்பவரே தலையிலும் முகத்திலும் படுகாயமடைந்த நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை - குடாநாட்டில் இளைஞர்கள் மத்தியிலும் அதிவேகமாக மோட்டார் சைக்கிள் செலுத்தும் பாணி அதிகரித்துள்ளது என்றும் -

இதனால் விபத்துச் சம்பவங்கள் நாளாந்தம் அதிகரித்து வருவதாகவும் - சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, இளைஞர்கள் வீதிகளில் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடித்து மெதுவாக மோட்டார் சைக்கிள்களைச் செலுத்தவேண்டும் எனறும் - ஆலோசனை தெரிவிக்கப்படுகிறது.

(எ-4-ரி)



நயினை நாகபூஷணி அம்மன் ஆலய கொடியேற்ற உற்சவத்தில் கலந்து கொண்ட புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன ஆலய பரிபாலகர்களுடன் கலந்துரையாடிய சமயம் எடுக்கப்பட்ட படம்.

## வேகக் கட்டுப்பாட்டை இழந்ததால்

# வீதியிலிருந்து விலகிய மினிபஸ் சைக்கிள் பயணி மீது மோதியது

## இளைஞர் படுகாயம்! சாரதி கைது!!

தெல்லிப்பழை,ஜூலை3

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மினிபஸ் ஒன்று பாதையிலிருந்து விலகி வீதியோரமாக சைக்கிளில் வந்துகொண்டிருந்தவரை மோதியதாகக் கூறப்படும் சம்பவத்தில் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் படுகாயமடைந்தார்.

மல்லாகம் பகுதியில் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

வீதியோரமாக நிறுத்தப்பட்டிருந்த லொறியை கடந்து அப்பால் செல்ல முற்பட்டவேளை மினிபஸ் கட்டுப்பாட்டை இழந்து பாதையிலிருந்து விலகி எதிரே துவிச்சக்கரவண்டியில் வந்து கொண்டிருந்தவர் மீது மோதியதாகக் கூறப்பட்டது.

இச்சம்பவத்தில் மல்லாகம் சோடாக் கம்பனி ஒழுங்கையைச் சேர்ந்த 19 வயதான சி.சுஜீந்திரன் என்னும் இளைஞர் தலையிலும் கைகளிலும் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் சிகிச்சைக்காக தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உடனடியாக அவ்விடத்துக்கு வந்த சுன்னாகம் பொலீஸார் மேலதிக விசாரணைகளின் பொருட்டு மினிபஸ்ஸின் சாரதியை கைது செய்ததுடன் மினிபஸ்ஸை சுன்னாகம் பொலீஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர்.

(எ-4-ரி)

## பூஸா பெற்றோல் நிலையத்தில் கொள்ளை

காலி, பூஸாவிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்று நேற்று அதிகாலை கொள்ளையடிக்கப்பட்டது. வான் ஒன்றில் வந்த மூவர் இக் கொள்ளையை நடத்தியுள்ளனர் என்று ரத்கம பொலீஸார் தெரிவித்தனர்.

அதிகாலை 2 மணியளவில் கொள்ளை நடந்திருப்பதாகவும், கொள்ளையடிக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பது உடனடியாகக் கணக்கிடப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

கொள்ளையர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் எனவும், ஏனையோரைக் கைதுசெய்ய தேடுதல் நடத்தப்படுவதாகவும் ரத்கம பொலீஸார் தெரிவித்தனர்.

(எ)

# சு.க.-ஜே.வி.பி. சனியன்று மற்றொரு சுற்றுப் பேச்சு

கொழும்பு,ஜூலை3

தேசிய முன்னணி அமைப்பது குறித்து சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே மற்றொரு சுற்றுப்பேச்சுக்கள் எதிர்வரும் சனிக்கிழமை மாலை ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவிருக்கின்றன.

முன்னணி அமைப்பது தொடர்பாகத் தீர்வு காணப்படாதிருக்கும் எஞ்சிய பிரச்சினைகள் குறித்து இப்பேச்சுக்களில் ஆராயப்படவிருக்கின்றன.

முன்னணியின் தலைவர், தவிசாளர், பொதுச் செயலாளர் பதவிகள் குறித்து இரு தரப்பினருக்குமிடையே இன்னமும் இணக்கம் ஏற்படவில்லை.

முன்னணி ஆட்சிக்கு வருமேயானால் அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுமா என்பது குறித்தும் இதுவரை தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

(எ)

# 52 இலங்கை அகதிகள் நாடு திரும்புவதற்கு விஸா

சேலம்,ஜூலை3

தாரமங்கலம் அகதி முகாமிலுள்ள 52 பேருக்கு இலங்கை செல்ல சேலம் கலெக்டர் ராதாகிருஸ்ணன் விஸா வழங்கினார்.

சேலம் மாவட்டம், தாரமங்கலம் பவளத்தானூர் இலங்கை அகதிமுகாமில் 268 குடும்பத்தினர் உள்ளனர்.

இவர்களில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 52 பேர் மீண்டும் இலங்கை செல்ல விருப்பம் தெரிவித்து மனு கொடுத்தனர். இவர்கள் வவுனியா, கிளிநொச்சி, மன்னார் பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

இலங்கையில் மீண்டும் அமைதிக்கான சூழ்நிலை ஏற்பட்டுவருவதாலும், நிரந்தரக் குடியுரிமை இல்லாததாலும் அவர்கள் இலங்கை செல்ல விருப்பம் தெரிவித்தனர் எனக் கூறப்பட்டது.

(எ)

## மாணவி மயூரணி கொலை வழக்கு:

# சோலைமலைத் தேவருக்கு நீதிமன்றம் நிபந்தனையுடன் பிணை அனுமதி

திருகோணமலை,ஜூலை3

இலங்கை மாணவி மயூரணி கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருக்கும் கல்லூரி நிறுவன உரிமையாளர் சோலைமலைத் தேவர் நிபந்தனையின் பேரில் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த வெள்ளியன்று சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி சதாசிவம், பத்தாயிரம் ரூபா ரொக்கப்பிணையும் இரு சரீரப் பிணைகளும் விதித்து அவரை விடுவித்தார்.

சோலைமலைத் தேவர் சென்னையில் நான்கு வாரங்கள் தங்கியிருந்து தினமும் உயர்நீதிமன்றில் ஆஜராகி கையெழுத்திடவேண்டும் என்ற நிபந்தனையை நீதிபதி விதித்திருக்கிறார்.

தனக்கு நெஞ்சுவலி அடிக்கடி ஏற்படுவதால் சிகிச்சை பெறவேண்டி இருக்கின்றதென்று அவர் உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தார். மனுவை ஏற்றுக்கொண்ட நீதிபதி பிணை அனுமதி வழங்கினார்.

இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட ராக்கம்மாள், ஹாஜி அலி ஆகியோர் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ)

# பாலபிரசன்னா மீண்டும் பிணை மனு; இன்று சென்னை நீதிமன்றில் விசாரணை

திருகோணமலை,ஜூலை3

இலங்கை மாணவி மயூரணி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள மாணவன் சி.பாலபிரசன்னாவின் பிணை மனு தொடர்பான விசாரணை - இன்று சென்னையில் நடைபெறுகிறது.

பொறியியல் பட்டப்படிப்பில் சேர்ந்து படிக்க அனுமதி கோரியும், நீதிமன்றத்தின் நிபந்தனையின் படி கட்டுப்பட்டு நடப்பதாகவும் தெரிவித்து பாலபிசன்னா இரண்டாவது முறையாக சென்னை உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருக்கின்றார்.

மருத்துவம், பொறியியல் கல்லூரி கவுன்ஸிலிங்கில் கலந்துகொள்ள அனுமதி கோரி அவர் சென்னை உயர் நீதிமன்றில் கடந்த மாதம் மனுத்தாக்கல் செய்திருந்தார். எனினும், நீதிமன்றம் அந்த மனுவை நிராகரித்து விட்டது.

இந்நிலையில், பாலபிரசன்னாவுக்கு பொறியியல் துறைக் கல்லூரியில் எலக்ரோனிக் கொம்யூனிகேசன் பாடநெறியில் படிப்பதற்கு இடம் கிடைத்துள்ளது. இதனை அடுத்தே இரண்டாவது பிணை மனு தாக்கல் செய்யப்பட்டது.

(எ)

## புத்தளம் நகரசபை விவகாரம்:

# தலைவர் பதவி வழங்கக் கோரி ஐ.தே.கவினர் இன்று ஆர்ப்பாட்டம்

'புத்தளம் நகரசபைத் தலைவராக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவரே இருக்க வேண்டும்' என்ற கோரிக்கையை வலியுறுத்தி இன்று ஆர்ப்பாட்டம் நடைபெறவிருக்கின்றது. சபையின் பதில் தலைவரான குவிண்டன் ஜோசப் (ஐ.தே.க.) தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் காலை 10.30மணி முதல் 11.30 மணி வரை நகர சபை அலுவலகத்திற்கு எதிரே இடம்பெறவுள்ளது.

நகர சபையின் ஐதே.கட்சி உறுப்பினர்களும் மற்றும் ஆதரவாளர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட நகரசபையில் ஆறு ஐ.தே. கட்சி உறுப்பினர்களும் இரண்டு முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் ஒரு பொ.ஐ.முன்னணி உறுப்பினரும் உள்ளனர்.

கடந்த தேர்தலின் பின்னர் ஏ.எம்.எம்.ஹுசைன் (முஸ்லிம் காங்கிரஸ்) தலைவராக நியமனம் செய்யப்பட்டதும், பின்னர் சுகவீனம் காரணமாக அவர் பதவியை இராஜினாமாச் செய்ததும் இதையடுத்து துணைத் தலைவரான குவிண்டன் ஜோசப்(ஐ.தே.க.) பதில் தலைவராகப் பொறுப்பேற்றதும் தெரிந்தவையே.

எனினும், தலைவர் பதவி மு.காவுக்கே மீண்டும் வழங்கப்பட முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப்பீடம் முயற்சி எடுத்துவருகிறது. இம்முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், ஐ.தே.கட்சிக்கே தலைவர் பதவி வழங்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியும் இப்போராட்டம் இடம்பெறுவதாக உறுப்பினரான எஸ்.ஏ.ஹபீஸ் (ஐ.தே.க.) தெரிவித்தார்.

(எ)

## குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்பு!

வீட்டில் இருந்து புறப்பட்டுச்சென்ற குடும்பஸ்தர் ஒருவர் மறுநாள் நண்பகல் ஆலயக் கிணறு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புலோலி தெற்கு புற்றளையைச் சேர்ந்த அருணாசலம் கந்தப்பசேகரம் (வயது 60) என்பவரது சடலமே புற்றளைப்பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் உள்ள கிணற்றில் இருந்து மீட்கப்பட்டு மந்திகை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணை பருத்தித்துறை மாவட்ட நீதிவான் க.அரியநாயகத்தின் உத்தரவின்பேரில் இன்று நடைபெறும்.

(ஐ-8)

# கொலைகளும் அவலங்களும் இனிப்போதும்; எதிர்காலத்தை நோக்கி முன்னேறுவோம்!

## ஷெரோனும் அப்பாஸும் கூட்டாக அறிக்கை

ஜெருசலேம்,ஜுலை3

கொலைகளும், அவலங்களும், வேதனைகளும் போதும். எதிர்காலத்தை நோக்கி துணிவுடன் இணைந்து முன்னேறுவோம்.

- இவ்வாறு இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷெரோனும், பலஸ்தீனப் பிரதமர் முஹமட் அப்பாஸும் நேற்று முன்தினம் இரவு கூட்டாக செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தனர்.

ஜெருசலேம் நகரில் உள்ள இஸ்ரேலியப் பிரதமரின் அலுவலகத்தில் முன்னதாக இரு தலைவர்களும் பேச்சு நடத்தினர். பின்னர் அந்த அலுவலகத்தின் முன்புறப்பகுதியில் இருவரும் இணைந்து செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது அவர்கள் கூட்டாக அறிக்கை வாசித்தனர்.

இருதலைவர்களுக்கும் சமாதானத்தின் மீதுள்ள நம்பிக்கையும், பரஸ்பரம் நிலவி வந்த அவநம்பிக்கையால் ஏற்பட்டுள்ள வைராக்கியமான சிந்தனையும் அந்த அறிக்கையில் பிரதிபலித்ததாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இஸ்ரேலியர்களுடனான பிரச்சினை அரசியல் ரீதியிலானது; இஸ்ரேலிய மக்களுடன் எங்களுக்குப் பகைமை இல்லை. எனவே, இதை அரசியல் ரீதியாகத் தீர்க்கவே நாங்கள் விரும்புகின்றோம் என்று பலஸ்தீனப் பிரதமர் அப்பாஸ் அறிக்கையில் கூறியிருக்கிறார்.

இரு பிரதமர்களும் செய்தியாளர்கள் முன்பாகத் தோன்றுகையில், பலஸ்தீன மற்றும் இஸ்ரேலிய தேசியக் கொடிகள் தவிர்க்கப்பட்டிருந்தன.

இதற்கிடையில், மேற்குக்கரை நகரான பெத்தலஹேமில் இருந்து நேற்று இஸ்ரேலியப் படையினர் வெளியேறினர். இதனையடுத்து பலஸ்தீனப் பொலீஸார் நகரின் பாதுகாப்புப் பொறுப்புக்களை ஏற்றனர்.

ஆயினும், பெத்தலஹேமில் இருந்து பலஸ்தீனர்கள் சுதந்திரமாக வெளியேற முடியாதுள்ளதாகவும் - ஜெருசலேமுக்கும் பெத்தலஹேமுக்கும் இடையே இஸ்ரேலியப் படையினர் ஏற்படுத்தியுள்ள பாதுகாப்பு அரண்கள் பலஸ்தீனர்களின் சுதந்திர நடமாட்டத்துக்கு தடையாக உள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.



பெத்தலஹேமிலிருந்து இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு அகன்ற மகிழ்ச்சியில் பலஸ்தீனப் பொலீஸ்காரர் ஒருவர்.



அல்ஜீரியத் தலைநகர் அல்ஜீயர்ஸ் அருகே இராணுவச் சரக்கு விமானம் ஒன்று குடியிருப்புப் பகுதி மீது விழுந்து நொறுங்கியது. இதில் விமானத்திலிருந்த நால்வரும், தரையிலிருந்த 8பேரும் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர். விமானம் விழுந்த இடத்தைப் படத்தில் காணலாம்.

# மேம்பாலத்தில் சென்ற ரயில் வீதியில் விழுந்து 18 பேர் பலி!

## இந்தியாவில் சம்பவம்

ஹைதராபாத் நோக்கிச் சென்றுகொண்டிருந்த 'கோல்கொண்டா' விரைவு ரயில் தடம்புரண்டதில் 18 பயணிகள் பலியாகினர். இவ்விபத்து வாரங்கல் ரயில் நிலையமருகே நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் நடந்தது.

வாரங்கல் அருகே பிரதான வீதி ஒன்றின் மேலாக அமைக்கப்பட்ட ரயில்வே மேம்பாலத்தில் சென்றுகொண்டிருந்த போது, ரயிலின் 'பிரேக்' வேலை செய்யாததால் தடம் புரண்டதாகக் கூறப்படுகிறது. இதனால் ரயிலின் பெட்டிகள் பாலத்தின் கீழே விழ நேரிட்டது. அப்போது அப்பகுதி கூட்ட நெரிசலுடன் இருந்தது. விபத்தில் இறந்த 10 பயணிகளின் உடல்கள் மீட்கப்பட்டுவிட்டன. இறந்தவர்களில் நால்வர் வீதியில் ஓட்டோவில் பயணம் செய்தவர்கள். ரயில் பெட்டி ஓட்டோ மீது விழுந்ததாலேயே அந்த நால்வரும் உயிரிழந்தனர். இவ்விபத்தில் 25 பயணிகள் காயமுற்றனர். (ஒ)

# இஸ்ரேலில் மசூதி இடிப்பு!

ஜெருசலேம்,ஜுலை3

இஸ்ரேலில் அரபுகள் அதிகம் வாழும் நாசரேத் நகரில் மசூதி ஒன்றை கடந்த திங்கட்கிழமை இஸ்ரேலிய அதிகாரிகள் இடித்தனர்.

இந்த மசூதிக்கு அருகே தேவாலயம் ஒன்று உள்ளது. இயேசுபிரான் இந்த மண்ணில் அவதரிக்கப்போகிறார் என்று முன் கூட்டியே வான தூதர் கபிரியேல் இந்த இடத்தில் நின்றுதான் அறிவித்தார் என்று கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர்.

அதேசமயம், இடிக்கப்பட்ட மசூதி இருந்த இடத்தில்தான், முஸ்லிம் மதத் தலைவர் ஒருவர் அடக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றும் அதனால் அது புனித இடம் என்றும் முஸ்லிம்கள் கூறுகின்றனர்.

இந்த சர்ச்சை பல ஆண்டுகளாக இருந்து வருகிறது.

இந்த மசூதி உரிய அனுமதி இல்லாமல் கட்டப்பட்டுள்ளது என்று கூறி, இதை இடிக்க கடந்த மார்ச்சில் இஸ்ரேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த 2000 ஆம் ஆண்டில் பாப்பரசர் இங்கு வருகைதரவிருந்தார். ஆனால், இந்தச் சர்ச்சை காரணமாக தமது பயணத்தை அவர் ரத்து செய்துவிட்டிருந்தார். (ஒ)



இஸ்ரேலில் மசூதி இடிக்கப்படுவதை எதிர்த்த ஆர்ப்பாட்டக்காரர் ஒருவரை இஸ்ரேலிய பொலீஸார் அப்புறப்படுத்தும் காட்சி.

# நூற்றுக்கணக்கான கென்யப் பெண்களை வல்லுறவுக்குட்படுத்திய பிரிட்டிஷ் படையினர்

## பாதிக்கப்பட்டோர் சட்டநடவடிக்கை மேற்கொள்ள முஸ்தீபு

நைரோபி,ஜுலை3

பிரிட்டிஷ் படையினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட கென்ய பழங்குடி இனப் பெண்கள் பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சுக்கு எதிராக வழக்குத் தொடரவுள்ளனர்.

கென்யாவின் 'மசாய்' பழங்குடி இனத்தைச் சேர்ந்த சுமார் 650 பெண்கள் சார்பாகவே இந்தச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

'மவுண்ட் கென்யா' என்ற இடமருகே பிரிட்டிஷ் இராணுவத்தின் பயிற்சித் தளமொன்று உள்ளது. இங்கு பிரிட்டிஷ் படையினருக்கு இராணுவப் பயிற்சிகள் வழங்கப்படும். இத்தளப் பகுதியில் 'மசாய்' பழங்குடியினர் வசிக்கின்றனர்.

1983 ஆம் ஆண்டுக்கும் கடந்த வருடத்துக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் இத்தளத்தில் தங்கியிருந்த பிரிட்டிஷ் இராணுவத்தினர் பல

உலக அரங்கில்

நூற்றுக்கணக்கான 'மசாய்'இனப்பெண்களை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி வந்துள்ளனர்.

இவ்வாறு பிரிட்டிஷ் படையினரால் பாதிப்படைந்த பெண்கள், அவர்களது இனத்தவரால் அவமான சின்னமாக வெறுத்தொதுக்கப்பட்டனர். பல பெண்கள் அவர்களது கணவர்களால் வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

- இப்படி அநாதரவான 650 பெண்கள் சார்பிலேயே பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இப்பெண்களில் பலருக்கு கலப்பினக்குழந்தைகள் பிறந்துள்ளன. இவர்கள் பிரிட்டிஷ் படையினரால் பாலி



மசாய் பழங்குடி இனப் பெண் ஒருவர்.

யல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட சமயத்தில் வைத்தியசாலைகளிலும் உள்ளூர் பொலீஸாரிடமும் அதற்கான சான்றுகளைப் பெற்று வைத்திருக்கின்றனர்.

கென்யப் பெண்களை ஒன்று திரட்டி சட்ட நடவடிக்கைகளை மார்ட்டின்டே என்ற பெண் சட்டத்தரணி மேற்கொண்டுள்ளார். கடந்த 30 வருடங்களாக கென்யப் பெண்களின் குற்றச்சாட்டு பிரிட்டிஷ் அரசினால் உதாசீனப்படுத்தப்பட்டதாக மார்டின்டே தெரிவித்தார்.

கடந்த ஆண்டு பிரிட்டிஷ் படையினர் கண்ணிவெடிகளை அகற்றத் தவறியதால் உயிரிழந்தவர்களுக்கான நஷ்டஈட்டை மசாய் இனத்தவருக்கு பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு வழங்க நேரிட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# தமிழகத்தில் மீண்டும் தமிழ் இணைய மாநாடு

## ஓகஸ்ட் மாதம் இடம்பெறும்

சென்னை,ஜுலை3

தமிழகத்தில் மீண்டும் தமிழ் இணைய மாநாடு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் 22 ஆம் திகதி முதல் 3 நாள்கள் இம்மாநாடு சென்னையில் நடைபெறுகிறது.

அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெறும் மாநாட்டை தமிழக முதல்வர் ஜெயலலிதா தொடங்கி வைக்கிறார்.

அண்ணா பல்கலைக்கழகம், தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஆகிய அமைப்புக்களுடன் இணைந்து உலகத் தமிழ் இணைய மாமன்றம் இம்மாநாட்டை நடத்துகிறது.

தகவல் தொழில்நுட்பத்தின் வாயிலாகத் தமிழ்க்கல்வி என்ற தலைப்பில் நடைபெறும் இம்மாநாட்டில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்ஸர்லாந்து, இலங்கை, சிங்கப்பூர், மலேஷியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர். இதுவரை நடைபெற்ற தமிழ் இணைய மாநாடுகளின் தொடர்ச்சியாக, அடுத்து மேற்கொள்ளப்படவேண்டிய ஆக்கபூர்வமான விடயங்கள் குறித்தும் இம்மாநாட்டில் விவாதிக்கப்படும்.

மாநாட்டையொட்டி, தமிழ் மென்பொருள் கண்காட்சியும் நடத்தப்படும். 1997 இல் சிங்கப்பூரில் முதன்முறையாகத் தமிழ் இணைய மாநாடு நடத்தப்பட்டது. 1999 இல் சென்னை, 2000 இல் சிங்கப்பூர், 2001 இல் மலேஷியா, 2002 இல் அமெரிக்கா ஆகிய இடங்களில் தமிழ் இணைய மாநாடுகள் நடத்தப்பட்டன. தற்போது தமிழகத்தில் இரண்டாவது முறையாக இந்த சர்வதேச தமிழ் இணைய மாநாடு நடத்தப்படவுள்ளது. (ஒ)

# சீனாவில் வெள்ளம்; 148 பேர் மரணம்!

பெய்ஜிங்,ஜுலை3

சீனாவில் கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் பெரும் மழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி 148 பேர் உயிரிழந்தனர்.

தெற்கு சீனாவின் ஸேஜியாங், ஜியாங்ஸி, குவாங்ஸி, சாங்கிங், சிசுவான், குயிஸொ ஆகிய மாநிலங்களும் தன்னாட்சிப் பிரதேசங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. 4 கோடிக்கு மேற்பட்ட மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். 48 லட்சம் ஏக்கர் பயிர்கள் சேதமடைந்துள்ளன என்று சீன அதிகாரிகள் கூறினர்.

# அமெ. நிதி நிறுவன மோசடியில் 4 பேருக்கு 30 ஆண்டுகள் சிறை!

சர்வதேச முதலீட்டாளர்களை சுமார் ஆயிரம் கோடி ரூபா அளவில் மோசடி செய்த வழக்கில் நியூயோர்க்கில் உலக வர்த்தக மையத்தில் இயங்கி வந்த இடைத்தரகு நிறுவனத்தைச் சேர்ந்த 4 பேருக்கு தலா 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

விமானத் தற்கொலைத் தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் அமெரிக்காவின் உலக வர்த்தக மையத்தின் 15ஆவது மாடியில் இயங்கி வந்தது. 'எவர்கிரீன் இன்டர்நஷனல் ஸ்பொட் டிரேடிங்' மற்றும் 'ப்பர்ஸ்ட் ஈக்விடி' நிறுவனங்கள் அந்நியச் செலவாணி மாற்றம் தொடர்பான வர்த்தகம் புரிவதாகக் கூறி அவுஸ்திரேலியா, நியூஸிலாந்தைச் சேர்ந்த ஆயிரத்து 400 பேரிடம் ரூ.1000 கோடிக்கும் மேல் பெற்று மோசடி செய்துள்ளதாக இந்நிறுவனங்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் நிறுவனத் தலைவர் உட்பட 4பேருக்கு தலா 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## கண்தெரியாத ஒளிப்பதிவாளர்

விருவேனியா நாட்டைச் சேர்ந்த ரெமிஜிஜஸ் என்ற கண் தெரியாத நபர் அசத்தலாக போட்டோ எடுத்து அனைவரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

கடந்த நான்கு வருடங்களாக போட்டோ எடுத்துவரும் இவருக்கு இரண்டு கண்களிலும் பார்வை தெரியாது. ஒலிகளை இனம் கண்டு மனிதர்களை, பொது இடங்களை, விழாக்களை படம் எடுத்து அசத்துகிறார்.


## பதவி வெற்றிடம்

கொக்குவிலில் இயங்கவுள்ள **இணையத்தள** நிறுவனமொன்றுக்கு (Net Cafe) கீழ்க்காணும் பதவிகளுக்கு பொருத்தமானவர்கள் விண்ணப்பிக்கவும்.

- கணனி இயக்குநர்கள்
- தட்டெழுத்தாளர்கள் (தமிழ், ஆங்கிலம்)
- கணக்குப் பதிவாளர்
- தொலைபேசி இயக்குநர்கள்

விளம்பர இல. 1938,
C/O உதயன்,
யாழ்ப்பாணம்.


## உவகையுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்



ஓய்வுபெற்ற ஆசிரியரும், சங்கத்தானை மீனாட்சி அம்மன் பரிபாலன சபை முன்னாள் தலைவரும், நீர்வேலி அருள்மிகு காளி அம்பாள் பரிபாலனசபைக் காப்பாளரும் ஆகிய

**உயர்திரு.செ.துரைசிங்கம்(J.P.)**

அவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்திற்கான சமாதான நீதிவானாக 13.06.2003 இல் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதையிட்டு நாம் அவரைப் பெருமகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்தி அவரது பணி நீடு சிறக்க அம்பாளை வேண்டுதல் செய்கின்றோம்.

*நீர்வேலி வடக்கு.*
*நீர்வேலி.* (19738) (21-32-13-15)

திரு.செ.புவிபாலசிங்கம் குடும்பம்.
திரு.கி.வைரவநாதன் குடும்பம்.


## பிள்ளையார் உணவுப் பூங்கா
## Pillaiyar Garden Restaurant

குளிரூட்டப்பட்ட மண்டபங்கள் 150 - 300 பேர் வரை அமரக்கூடிய இருக்கை வசதிகள்.

- திருமணங்கள்
- திருமணப்பதிவு (Registration) வைபவங்கள்
- மகா நாடுகள் (Conference)
- ஒன்றுகூடல் வைபவங்கள்
- தொழிலக வைபவங்கள்
- விருந்து உபசாரங்கள்
- பிறந்த நாள் வைபவங்கள்

போன்ற வைபவங்களுக்கு சுத்தமான சுவையான உணவுடன் தரமான சேவையுடன் திறந்த வெளி பூங்காவில் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

எங்களிடம் வாகன தரிப்பிடம், குளிரூட்டப்பட்ட வாகன வசதி, குளிரூட்டப்பட்ட அறைகள் உண்டு.

மேலதிக உணவுகளான கடலுணவுகள், இறைச்சி வகைகள் என்பன பிரத்தியேகமாகத் தயார் செய்து கொடுக்கப்படும். பகல், இராப்போசன விருந்து வைபவங்களுக்கு, வியாபார விருந்து வைபவங்களுக்கு (Business Lunch) ஒழுங்குகள் செய்துதரப்படும்.
Out door Catering also under taken.
விசேட வைபவங்களுக்கு நீங்கள் விரும்பும் இடத்திற்கு வந்து உணவு பரிமாறப்படும்.
விபரங்களுக்கும் முன்கூட்டிய பதிவுகளுக்கும் தொடர்புகொள்ளவும்.

முகாமையாளர்:
பிள்ளையார் ஸ்ரோர்ஸ் (INN)
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (19761) (21-19-15)

Tel. 021 - 222 - 5595,
021 - 222 - 2829
Fax: 021 - 222 - 5595



## வெளிவந்துவிட்டது

**மனிதவள முகாமைத்துவம்** - அடிப்படை எண்ணக்கருக்கள்
(ஆளணி முகாமைத்துவ எண்ணக்கருக்களை உள்ளடக்கியது)

நூலாசிரியர்:
**தனேஸ்வரி ரவீந்திரன்**
(சிரேஷ்ட விரிவுரையாளர், முகாமைத்துவத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

வணிக, முகாமைத்துவ கற்கைநெறிகள், வெளிவாரிப்பட்டப் படிப்பு பரீட்சைகள், வங்கியியல் பரீட்சைகள், நிர்வாக சேவைப் பரீட்சைகள், அரச உத்தியோகத்தர்களுக்கான தகுதிகாண் பரீட்சைகள், உயர் தொழில்நுட்ப நிறுவனப் பரீட்சைகள் மற்றும் தொழில்சார் கற்கைநெறிப் பரீட்சைகளுக்கும் (CMA, CIMA) உகந்த நூல்.

கிடைக்குமிடங்கள்:
D.C.M. கல்வி நிலையம், பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் மற்றும் யாழ். நகரிலுள்ள பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதி ஒன்றின் விலை ரூபா 200/= (21-13-15) (19731)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி சுரேஜினி நவராஜா அவர்களின்
அன்புத் தந்தையார்
**ஆ.மரியநாயகம்** அவர்கள்
20.06.2003 அன்று காலமாகியதையிட்டும்,
எமது கல்லூரி உப அதிபர்
**P.W.நவராஜா** அவர்களின் அன்புத் தந்தையார்
**ம.பேதுருப்பிள்ளை** அவர்கள்
29.06.2003 அன்று காலமாகியதையிட்டும்

நாம் மிகவும் துயருறுகின்றோம். இவர்களின் பிரிவால் துயருறும் அன்னார்களின் குடும்பத்தினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன், எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து அவர்களது ஆத்மாக்கள் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/புனித அந்தோனியார் கல்லூரி,
ஊர்காவற்றுறை.

(19752)(21-24-13-19)

## பொங்கு தமிழுக்கு ஆதரவளித்தோருக்கு பல்கலை. சமூகம் நன்றி

யாழ்ப்பாணம்,ஜுலை3

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 'பொங்கு தமிழ்' நிகழ்வு வெற்றிகரமாக நடந்தேறுவதற்கு சகல வழிகளிலும் ஆதரவு வழங்கிய தரப்புக்களுக்கு யாழ்.பல்கலைக்கழக சமூகம் நன்றி தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்நிகழ்வு, சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய, சகல தரப்புக்களையும் குறிப்பிட்டு நன்றி தெரிவிக்கும் அந்த அறிக்கையை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அனுப்பிவைத்துள்ளது. (ஓ-9)

## கல்வி முதுகலைமாணி நிகழ்ச்சித் திட்டத்துக்கு விண்ணப்பிக்கலாம்

வலிகாமம்தெற்கு,ஜுலை3

இலங்கை திறந்த பல்கலைக்கழகக்கல்வி முதுகலைமாணி பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2004/2005 ஆண்டுக்கான முதுகலைமாணி பட்டநிகழ்ச்சியில் சேர்ந்து கொள்ள விரும்புபவர்கள் எதிர்வரும் 9ஆம் திகதிவரை அதற்கான விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாண பிராந்திய திறந்த பல்கலைக்கழக அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்கான விண்ணப்பமுடிவுதினம் இம்மாதம் 16ஆம் திகதியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-152)

## சிங்கப்பூரிலிருந்து வந்த கொள்கலனால் சர்ச்சைகள்

கொழும்பு,ஜுலை3

சிங்கப்பூரில் இருந்து விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகக் கூறப்படும் கொள்கலன் தொடர்பாக சர்ச்சை எழுந்துள்ளது.

சிங்கப்பூரில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட இக்கொள்கலனில் இருந்த பொருள்களுக்கு அங்கீகாரம் வழங்கியது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் இருந்து ஜனாதிபதி விளக்கம் கோரியதை அடுத்தே இந்த சர்ச்சை தோன்றியுள்ளது.

இந்த கொள்கலனில் நாள்காட்டிகள் மற்றும் விடுதலைப் புலிகளின் இலட்சினை பொறிக்கப்பட்ட திறப்புக் கோர்வைகள் போன்ற பொருள்களே காணப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஓ-5)

## ஜனாதிபதிக்கு எச்சரிக்கை

கொழும்பு,ஜுலை3

அரசமைப்புக்கு முரணான நடவடிக்கைகளில் ஜனாதிபதி ஈடுபட்டால் பாரதூரமான விளைவுகளை அவர் சந்திக்க நேரிடும் என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா எச்சரித்துள்ளார்.

உள்துறை அமைச்சின் பொறுப்புகளை ஜனாதிபதி தன்னுடைய அதிகாரத்தின் கீழ் கொண்டு வருவதற்கு முயற்சிப்பதாக வெளியான செய்திகள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே இந்த எச்சரிக்கையை அமைச்சர் விடுத்தார்.

அரசமைப்புக்கு முரணாக ஜனாதிபதி தன்னிச்சையாக எதனையும் செய்ய முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-5)

## வரணியில் புதிய காவலரண்

யாழ்ப்பாணம்,ஜுலை3

வரணி உபதபால் நிலையத்துக்கு அருகில் உள்ள சந்தியில் படையினரால் புதிய காவலரண் ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது.(ம-10-170)


## உடன் தேவை

எலக்ரோ பிளேட்டிங் பொலிசிங் செய்யக்கூடியவர் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:
பிள்ளையார் மெற்றல்
57, நவீன சந்தை, வவுனியா.
T.P. 024 - 21129,
024 - 21577
(19644) (21-13-15)


## தவறிவிட்டது

வேலணை, பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோயிலடியில் வசிக்கும் சிவகடாட்சம் சிவனேசன் என்பவருடைய தேசிய அ. அட்டை (இல. 670182110V), அடையாள அட்டை நிழற்படங்கள் (2), ஒருதொகைப் பணமும் யாழ். நகரில் இருந்து முகமாலை செல்லும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்காணும் முகவரிக்கு அறியத் தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(21-32-13-15) (19737)

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பனும் மாணவ முதல்வனுமாகிய
ப.சத்தியராகவனின் அன்புத் தந்தையார்
**க.பரமானந்தன்**

அவர்கள் காலமாகியதையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.
2004 உயர்தர மாணவர்களும்,
மாணவ முதல்வர்களும்.
(21-32-13-15) (19734)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி சாந்தி நந்தகோபாலன் அவர்களது அன்புத் தந்தையார்
**கந்தப்பு பரமானந்தன்**

அவர்கள் காலமானதையிட்டு அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன், அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.

யா/சேர் வைத்திலிங்கம்
துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயம்,
வேலணை.

- ஆசிரியர் கழகம்.

(19732) (21-13-15)

## துயர் பகிர்கின்றோம்

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.வ.செல்வராசா அவர்களின் வாழ்க்கைத் துணையாரது பாசமிகு தாயார்
**திருமதி சேதுப்பிள்ளை தருமராசா**

அவர்களின் மறைவு குறித்து எமது துயர்தனைப் பகிர்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அதேநேரத்தில் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பளைக் கல்விக்கோட்டம்,
பளை.
(C-28703) (21-13-15)

கோட்டக் கல்வி அதிகாரி,
அதிபர்கள், ஆசிரியர்கள்,
ஊழியர்கள்.

## நெஞ்சை விட்டகலாத 31ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம்
12 - 11 - 1917



மறைவு
03 - 06 - 2003

**திருமதி செல்லையா சீதா**

அல்லும் பகலும் பாடுபட்டு
அனைவரும் போற்ற எம்மை வளர்த்தீர்
மாதமொன்று போனாலும்
மாறாதம்மா உங்கள் நினைவு.

03-06-2003 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டி மதியபோசன நிகழ்வு இன்று (03.07.2003) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புக்கரம் நீட்டி அழைக்கின்றோம்.

*கலைநகர்,*
*அளவெட்டி தெற்கு.* (19743) (21-13-15)

- குடும்ப உறவுகள்.

## 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

பூவுலகில்
04 - 04 - 1924



புகழுலகில்
04 - 06 - 2003

**திருமதி முத்தம்மா சாந்தலிங்கம்**

அன்பும் பாசமும் தந்து
எங்களுக்கு நல்வழி காட்டிய
எங்கள் அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபத் தொடர்பு கொண்டவர்களுக்கும் நன்றி கூறுவதுடன், நாளை (04-07-2003) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு அந்தியேட்டிக் கிரியைகள் நயினாதீவு கங்காதரணி தீர்த்தக் கரையிலும் வீட்டில் நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றிலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

3ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (19745) (26-21-13-15)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

உதயன்

# காவலரணங்கள் தேவையா?

வடக்கு - கிழக்கிலிருந்து பாதுகாப்புப் படையினரின் கெடுபிடிகள், அத்துமீறல்கள், அடாவடித்தனங்கள் பற்றியெல்லாம் அடிக்கடி செய்திகள் வருகின்றன.

மக்களின் பாதுகாப்புக்காகவே படையினர் நிறுத்தப்பட்டிருக்கின்றார்கள் என்று அரசுத் தரப்பில் கூறப்படுகிறது.

அது உண்மையென்றால் பொதுமக்களுக்கு அச்சமூட்டும் நடவடிக்கைகளிலும், அவர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் காரியங்களிலும் அவர்களின் நடமாடும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் விடயங்களிலும் சில சமயங்களில் அவர்களை நேரடியாகவே துன்புறுத்தும் நடவடிக்கைகளிலும் படையினர் ஈடுபடுவது ஏன் என்று கேள்வி எழுப்பப்படுகிறது.

வடக்கிலும், கிழக்கிலும் படையினரின் எத்தனையோ முகாம்கள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் எத்தகைய காரியங்களில் ஈடுபட்டன என்பதற்குத் தனித்தனி வரலாறுகள் உண்டு.

படைமுகாம் என்றால் அந்தப் பக்கம் தலைவைத்துப்படுக்கவே மக்கள் அஞ்சுகின்றார்கள்.

படைமுகாம்கள் போதா என்று இப்போது யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் காவலரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

படையினரின் இந்த நடவடிக்கை காரணமாக மக்கள் பீதி அடைந்துள்ளனர்.

யாழ். பொதுஜன அமைப்புகள் இது தொடர்பாகக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யவுள்ளன என்று செய்திகள் கூறுகின்றன.

இப்போது யுத்தம் இல்லை. யுத்தநிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறையில் உள்ளது. எவரும் எந்த இடத்திலும் ஆயுதங்களுடன் நடமாட முடியாது.

இந்தநிலையில் படையினரின் காவலரண்கள் ஏன் என்று கேள்வி எழுப்பப்படுகிறது.

போர் இல்லை, புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறையில் இருக்கிறது என்றபோதிலும் யாழ்ப்பாணத்தில் அரசியல் கொலைகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டு வருகிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகவே காவலரண்கள் அமைக்கப்பட்டு அங்கே படையினர் நிறுத்தப்படுகிறார்கள் என்று படைத்தரப்பில் கூறப்படுகிறது.

எல்லோரும் பாதுகாக்கப்படவேண்டியவர்களே. உயிர் பெறுமதிமிக்கது. எவருடைய உயிர் பறிக்கப்பட்டாலும் அது கண்டிக்கப்பட வேண்டியது. மேலும் அப்படியான அநியாயம் நடைபெறாமல் தடுக்க வேண்டியதுதான்.

தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்கள் கொலை செய்யப்படும்போது, அதைச் செய்தவர்கள் விடுதலைப் புலிகளே என்று தமிழ்க் குழுக்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

விடுதலைப் புலிகள் அந்தக் குற்றச்சாட்டை மறுக்கிறார்கள். தமிழ்க் குழுக்களில் உள்ள சிலர் தாமே கொலைகளைச் செய்துவிட்டு, புலிகளுக்கு அபகீர்த்தி ஏற்படுத்துவதற்காக அவர்கள் மீது பழியைப் போடலாம் அல்லவா? இது அரசியல் சகஜம் என்று புலிகள் கூறுகிறார்கள்.

புரிந்துணர்வு உடன்படிக்கைப்படி தமிழ்க் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டுவிட்டன.

புலிகளும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணம் உட்பட எந்தப் பகுதியிலும் ஆயுதம் எதுவும் வைத்திருக்கமுடியாது.

அப்படியிருந்தும் சூட்டுச் சம்பவங்களும் கைக்குண்டு வீச்சுச் சம்பவங்களும் நடைபெறுகின்றன. இவற்றை யார் செய்கிறார்கள்? எப்படிச் செய்கிறார்கள்? கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்புப் படையினரைச் சார்ந்தது. கொலைகளைப் படையினர் தவிர்க்காமல் இருக்கிறார்கள் என்றால், அது அவர்களின் திறமைக் குறைவையோ, இயலாமையையோதான் காட்டும்.

காவலரண்களை அமைத்துத்தான் கொலைகளைத் தடுக்கமுடியுமா?

திருகோணமலையில் மின்சார நிலைய வீதியில் உள்ள புளொட் அலுவலகம் மீது நேற்றுமுன்தினம் இரவு கைக்குண்டு வீசப்பட்டிருக்கிறது.

இத்தனைக்கும் புளொட் அலுவலகத்துக்கு நேர் எதிரே பொலீஸ் காவலரண் ஒன்று அமைந்திருக்கிறது. படையினரின் காவலரண்களுக்கு அருகிலும் வடக்கு - கிழக்கில் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. ஆயின், காவலரண்களால் என்ன பயன்?

அநியாயக் கொலைகளைத் தடுக்க உளவுப் பிரிவை உஷார்ப்படுத்தி வைத்திருக்கலாம்; ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் அல்லவா?

அவற்றை விட்டுவிட்டு, மக்களின் நடமாட்டம் அதிகம் உள்ள வீதிகளில் காவல் அரண்களை அமைத்து மக்களுக்குப் பல வழிகளிலும் தொல்லை கொடுக்கவேண்டுமா?

---

போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த

# நடைபாதை வியாபாரிகள் மூவர் பொலீஸாரால் கைது!

யாழ்ப்பாணம்,ஜூன்3

போக்குவரத்துக்கு இடைஞ்சல் விளைவித்த நடைபாதை வியாபாரிகள் மூவர் யாழ். பொலீஸாரினால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இவர்களுக்கு யாழ். மாவட்ட நீதிவான் இ.த. விக்னராஜா தலா 250 ரூபா தண்டம் விதித்தார்.

வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த நல்லையா தவராசா, உரும்பிராயைச் சேர்ந்த ரஞ்சிநாதன் மதன், கொட்டடியைச் சேர்ந்த சேகரன் சிறீகரன் ஆகிய மூவருமே நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். பொதுமக்களுக்கும் வாகனப்போக்குவரத்துக்கும் இடையூறு விளைவித்ததாக இவர்கள் மீது பொலீஸார் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

முதற்றடவையாக இவர்கள் இக்குற்றத்தைப் புரிந்தமையால் அவர்களை எச்சரிக்கை செய்த யாழ். நீதிவான் இ.த. விக்னராஜா, மூவரையும் தலா 250 ரூபா வீதம் அபராதமாகச் செலுத்துமாறு உத்தரவிட்டதுடன் அவர்களை விடுவித்தார். (ம-5)

---

## நாட்டு நடப்பு

### புகைவண்டி என்றால் என்ன?

பன்னிரண்டு வயதுப் பையன்
 பார்த்திபன் என்னும் பேரான்
கண்ணெனக் கல்வி போற்றி
 காட்டுறான் திறமை எல்லாம்
எண்ணரும் புள்ளி பெற்றான்
 எய்தினான் புலமைப் பரிசில்தன்னை
வண்ணமார் விஞ்ஞானம் தன்னில்
 வற்றாத பற்று உடையான்
என்னம்மா புகை இரதம்
 எப்படி இருக்கும் என்று
சொல்லம்மா என்று கேட்க
 சுதந்திரம் வந்த பின்பே யென்றாள்
கண்ணாரக் காண்பதற்கு தம்பி
 காலமின்னும் இருக்கு தென்றாள்
என்னம்மா எப்படி சுதந்திரத்தை
 ஏற்றிடும் புகைவண்டி என்றான்.

- விகடகவி.

---

# தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு 14ஆம் திகதிமுதல் நடமாடும் சேவை

## 5 தினங்களுக்கு சகல பகுதிகளிலும் நடக்கும்

யாழ்ப்பாணம்,ஜூலை3

தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கான நடமாடும் சேவை விரைவில் யாழ்.குடாநாட்டில் இடம்பெறவுள்ளது. மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் இந்தச் சேவை நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதியில் இருந்து தொடர்ச்சியாக ஐந்து தினங்களுக்கு இந்த நடமாடும் சேவை இடம்பெறும். இதற்கென இலங்கை ஆட்பதிவுத்திணைக்கள உயரதிகாரிகள் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரவுள்ளனர். அவர்களுடன் யாழ். செயலக அடையாள அட்டைப் பிரிவு அதிகாரிகளும் சேவையில் இணைந்துகொள்வர்.

இதுவரை அடையாள அட்டையைப் பெறாத 16 வயதுக்கு மேற்பட்டவர்களும், விண்ணப்பித்து 6 மாதங்களாகியும் அடையாள அட்டை கிடைக்கப்பெறாதவர்களும் அடையாள அட்டையைத் தொலைத்தவர்கள் மற்றும் அவை பழுதடைந்தவர்களும் தத்தமது பகுதிகளில் நடக்கும் சேவையில் புதிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளமுடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி, கரவெட்டி, கோப்பாய் மற்றும் பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலும் -

15ஆம் திகதி சாவகச்சேரி பிரதேச செயலர், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் -

16ஆம் திகதி, உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் மற்றும் சங்கானை பிரதேச செயலர் பிரிவுகளிலும் -

17ஆம் திகதி வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளிலும் -

18ஆம் திகதி நெடுந்தீவு, யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலும் - இந்த நடமாடும் அடையாள அட்டை சேவை நடைபெறவுள்ளது.

இச்சேவையில் தமது தேவைகளை நிறைவேற்ற விரும்புவோர் தத்தமது கிராமசேவையாளரிடம் அடையாள அட்டைக்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்று கிராம சேவையாளர், பிரதேச செயலர்களிடம் உறுதிப்படுத்தி வைத்திருப்பதோடு அடையாள அட்டைக்கான புகைப்படத்தினையும் பெற்று அனைத்தையும் நடமாடும் சேவையில் சமர்ப்பிக்குமாறும் யாழ். செயலக தேசிய அடையாள அட்டைப் பிரிவு உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ம-5)

---

# தென்மராட்சிக்கான மின் விநியோக பணி தாமதமடைவதற்கு மிதிவெடிகளே காரணம்

## அரியாலையில் வீதியோரம் அகற்றப்படாமல் கிடக்கின்றன

யாழ்ப்பாணம்,ஜூலை3

தென்மராட்சிப் பிரதேசத்துக்கான மின்சார விநியோகம் தாமதமடைவதற்கு அரியாலையில் கண்டி வீதியோரத்தில் காணப்படுகின்ற மிதிவெடிகள் அகற்றப்படாமையே காரணம் என்று இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொதுமுகாமையாளர் ஆர்.முத்துரட்ணானந்தன் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சியில் சாவகச்சேரி தொடக்கம் கொடிகாமம் வரையான பகுதிக்கு மின்சாரத்தை வழங்குவதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதும் அரியாலைப் பகுதியில் ஏ-9 வீதியோரங்களில் காணப்படும் மிதிவெடிகளினாலேயே இப்பணி தாமதமடைகிறது என்றும் அவர் சொன்னார்.

குடாநாட்டுக்கான இரண்டாம் கட்ட மின் விநியோகத் திட்டத்திலேயே தென்மராட்சி மற்றும் அளவெட்டி வடக்குப் பகுதிகள் அடங்குகின்றன. அளவெட்டிப் பகுதியில் இப்பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றபோதும் அரியாலையில் காணப்படும் மிதிவெடிகள் காரணமாக தென்மராட்சிக்கான பணிகள் தாமதமடைகின்றன.

இப்பகுதிகளுக்கு மின்விநியோகம் ஏற்படுத்தப்பட்ட பின்னரே மூன்றாம் கட்டத் திட்டம் பற்றி கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-10-6)

---

# வடமராட்சிக் கடலில் மீண்டும் இந்திய மீனவர்கள் அடாவடி

வடமராட்சி,ஜூலை3

வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) கடல் பிரதேசத்தில் மீண்டும் இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகளின் ஆக்கிரமிப்பு, தொல்லைகள் அதிகரித்துள்ளன. நேற்றுமுன்தினமிரவு மட்டும் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகள் இந்திய ரோலர்களின் அடாவடித்தனத்தால் காணாமற்போய்விட்டன.

கடந்த இரண்டு மாதங்களாக இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகளின் ஆக்கிரமிப்பு, தொல்லைகள் வடமராட்சி வடக்கு கடல் பிரதேசத்தில் மிகக் குறைவாக இருந்துவந்தன.

ஆனால், கடந்த சில தினங்களாக இரவுவேளை இந்திய மீனவர்களின் ஆயிரக்கணக்கான இழுவைப்படகுகள் (ரோலர்கள்) வடமராட்சி வடக்கு கடல் பிரதேசத்தை ஆக்கிரமித்து வருகின்றன.

இக் கடல் பிரதேசத்தில் இரவுவேளை மீன் பிடிப்பதற்காக வலைகளை வீசி விட்டு காத்திருந்த சக்பர் மடம், இன்பருட்டி, சக்கோட்டை ஆகிய இடங்களைச் சேர்ந்த மூன்று மீனவர்களின் வலைகள் காணாமற்போயுள்ளன. இவ் வலைகளை இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் அறுத்துச்சென்று விட்டதாக அவர்கள் தெரிவித்தனர். அறுபட்ட வலைகளின் பெறுமதி 30 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இச் சம்பவம் குறித்து வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு, தொல்லைகள் தொடர்பாக ஏற்கனவே பல தரப்பினருக்கும் முறையிட்டும் எவ்வித பலனும் கிட்டவில்லை என சமாசத்தின் செயலாளர் எஸ். சூரியகுமாரன் ஆதங்கம் தெரிவித்தார். இது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டால்தான் மீனவர் சமூகம் தொல்லைகள் இன்றி தொழில் புரிய முடியும் என அவர் தெரிவித்தார். (ம-173)

---

### நாளை

ஆனி 21
வெள்ளிக்கிழமை
04.07.2003
திதி : பஞ்சமி
முன்னிரவு 8.55 வரை,
நட்சத்திரம் : மகம்
பிற்பகல் 2.11வரை,
சுபநேரம் : 5.57-7.27
ராகுகாலம் : 10.27-11.57
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

தவறு அமைதியான ஊற்றாகத்தான் தொடங்குகிறது. ஆனால் கொந்தளிக்கும் கடலாக முடிகிறது.

---

# மின் இணைப்பு இல்லாமையால் ஐஸ் தொழிற்சாலை முடக்கம்

வடமராட்சி,ஜூலை3.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்திற்கு மின் இணைப்பு வழங்கப்படாமையினால் ஐஸ் உற்பத்தியை ஆரம்பிக்க முடியாத நிலையில் உள்ளது.

மீனவர்களின் வசதிகருதி சிறிய அளவில் ஐஸ் உற்பத்தியை மேற்கொள்வதற்கென, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் 12 லட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் உற்பத்தி இயந்திரம் ஒன்றைச் சமாசத்துக்கு வழங்கியுள்ளது.

ஐஸ் உற்பத்தி செய்வதற்காக குறித்த இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளபோதிலும், இலங்கை மின்சார சபையிடமிருந்து மின் இணைப்பு கிடைக்காமையால் ஐஸ் உற்பத்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. (ம-173)

## உவகையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



மண்டைதீவு முன்னாள் கிராமோதய சபை இணைக்கசபை உறுப்பினரும். கிராமமுன்னேற்ற சங்க உதயசூரியன் சனசமூக நிலைய செயலாளரும். சிறந்த சமூக சேவையாளரும். தற்போதைய கண்ணகையம்மன். முத்துமாரியம்மன் பரிபாலனசபை செயலாளரும். வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க உப தலைவருமாகிய

### திரு. அருளானந்தம் ஸ்ரீபத்மராசா

அவர்கள் மாவட்ட நீதிபதி உயர்திரு. இ.த. விக்னராஜா அவர்களது முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுள்ளதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*2ஆம் வட்டாரம், மண்டைதீவு,*
*(கொக்குவில்)* (19750) (21-12-18)

வே.உமாபதி
(மாமா)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஓய்வுபெற்ற வெளிக்கள உத்தியோகத்தரும் சுன்னாகம் வர்த்தக சங்கத்தின் தலைவரும், யாழ்ப்பாணம் வர்த்தக சமாசத்தின் பொருளாளரும் சுன்னாகம் சன்ராஜ் கொம்பிளக்ஸ் நிறுவனத்தின் உரிமையாளருமாகிய

### உயர்திரு. நடராசா சண்முகவேல்

அவர்கள் மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி S.இளங்கோவன் முன்னிலையில் 30-06-2003 இல் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு அவரைப் பாராட்டுவதோடு, அவரது பணி மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

(19724) (21-12-18) **சுன்னாகத்தைச் சேர்ந்த நண்பர்களும் உறவினர்களும்.**

## 45ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 15 . 06 . 1987



இறப்பு 20 . 05 . 2003

### அமரர் தியாகராஜா மயூரன்

மழைநின்ற பின்பும் நீர் சொரியும் மரமாய்
எங்கள் நினைவில் என்றும் நீ
நிலைத்திருப்பாய் அன்புச் செல்வனே!
உன் நினைவுகள் எம்முன் நிலைத்திருக்கும்

20.05.2003 அன்று சிவபதமடைந்த எமது அன்புச் செல்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (03.07.2003) வியாழக்கிழமை நடைபெறவுள்ளன. இந்நிகழ்விலும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

7ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (21-31-12-18) (19726)

- குடும்பத்தினர்.

## 7 ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 06 - 11 - 1978



வீரச்சாவு 19 - 07 - 1996

### வீரவேங்கை சேரன்

(தர்மலிங்கம் தயாளன்)
திதி: சதுர்த்தி
(சம்பவம்:- ஓயாத அலைகள் 01
முல்லைத்தீவு இராணுவமுகாம் தகர்ப்பில்)

அன்பின் திருவுருவாய் ஆசை மைந்தனாய்
பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
என்றும் உன் அழகியமுகம் எம் முன் தோன்றுதடா!
வாசத்தைத் தந்துவிட்டு வாழ்க்கையை முடித்துவிட்டாய்
காலத்தின் கோலத்தால் கனவாகிப் போனாயடா!
உன் ஆத்மா சாந்திக்காக என்றும் இறைவனைத் துதிக்கின்றோம்!

(19602)

என்றும் உன் நினைவில் வாழும்:
அப்பா, அம்மா, அண்ணா, தங்கைகள்,
உற்றார், உறவினர்.

*வாகீஸ்வரி வீதி,*
*கோண்டாவில் வடக்கு.* (21-12-18)

## உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு

### வடக்கு - கிழக்கு மாகாண சபை

### வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

## மாவட்ட பிரதி திட்டப் பணிப்பாளர் பதவி

### யாழ்ப்பாண மாவட்டம்

யாழ்ப்பாண மாவட்டங்களுக்கான மாவட்ட பிரதி திட்டப் பணிப்பாளர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்கும்போது விண்ணப்பதாரர் 40 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல்வேண்டும். 55 வயதுக்கு குறைந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். நியமனங்கள் திருப்திகரமான சேவையினடிப்படையில் வருடாந்தம் புதுப்பிக்கக்கூடிய இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையிலாகும். அவ்வொப்பந்தம் திருப்தியினடிப்படையில் மேலும் நீடிக்கப்படும்.

### விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பதாரிகள் அவர்களது கல்வித்தகைமை, தொழில்சார் தகைமைகள், பிறந்த திகதி, முன்னைய தொழில் விவரங்கள், முன்னைய அனுபவம், இரண்டு சான்றுபகர்வோர்களின் பெயர்கள், முகவரிகள், சுய தரவுகள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் உட்பட விண்ணப்பத்தினை அவர்களாகத் தயாரிக்க வேண்டும். *விண்ணப்பம் பதிவுத்தபால் மூலம் 18-07-2003 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் திட்டப் பணிப்பாளர், வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD) இல. 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை* என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும். அரச திணைக்களம்/அரச கூட்டுத்தாபனங்கள்/சபைகள் என்பவற்றில் சேவையிலிருப்போர் அவர்களது நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

### தெரிவு செய்யப்படும் முறை

நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவுசெய்யப்படும்.

### சம்பளம்

அரச சேவையில் இப்பதவிக்குரித்தான சம்பளமும் விண்ணப்பதாரியின் தகைமைகளுக்கும் அனுபவத்திற்கமைவாக 2002-12-26ஆம் திகதிய இல. 10, முகாமைத்துவ சுற்றுநிருபத்திற்கேற்ப சம்பளத்தின் 50% மேற்படாத படி ஒன்று வழங்கப்படும்.

### கடமைகளும் பொறுப்புகளும்

**விசேடமாக இதற்குப் பொறுப்புடையவர் பின்வரும் விடயங்களில் திட்டப் பணிப்பாளருக்கு உதவவேண்டும்.**

- மாவட்ட முகாமைத்துவ பிரிவினை திறமையாக முகாமைத்துவப்படுத்தல், அதன் நடவடிக்கைகள் மற்றும் செயல்நிறைவேற்று மதிப்பீடு என்பவற்றுக்கு ஒத்துழைத்து மேற்பார்வை செய்தல்.
- திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலுடன் தொடர்புடைய முறைகள் மற்றும் நடவடிக்கைகளைத் திறமையாக ஏற்பாடுசெய்தல் மற்றும் விருத்தி செய்தல், திட்ட நடவடிக்கைகளின் செயற்பாடுகளில் ஒத்துழைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- நடைமுறைப்படுத்தலின்போது ஏற்படும் பிரச்சினைகளை உடனே கண்டு அதற்கான தீர்வு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளல்.
- திட்ட நடைமுறைப்படுத்தலுடன் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு நிதி முகவரகங்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் கிட்டிய நட்புறவினை ஏற்படுத்தி பேணி வரவேண்டும்.
- திட்ட பணிப்பாளரின் வேண்டுகோளின் படி வழங்கல் ஆவணம் மற்றும் அறிக்கைகள் தயாரிக்க வேண்டும்.

### தேவையான தகைமையும் அனுபவமும்

நாடளாவிய சேவையின் முதலாம் வகுப்பிலுள்ளோர் நியமனத்திற்கு தகுதி பெற்றவர்களாவர். பொருத்தமான முதலாம் வகுப்பு விண்ணப்பங்கள் போதியளவு இல்லாத சந்தர்ப்பங்களில் நாடளாவிய சேவையின் II வகுப்பிலுள்ளோர் கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படுவர்.

### தொழில்சார் திறமைகள்

- சிக்கலான மற்றும் மாறுபட்ட நடவடிக்கைகளுடனான திட்டங்களைத் திட்டமிட்டு செயற்படுத்துவற்கான திறமை.
- திட்டத்தின் நீண்டகால நீடித்த தன்மையை உறுதிசெய்வதற்கான திறமையான நடைமுறைப்படுத்தலுக்கு பங்குதாரர்களின் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பு என்பனவற்றை ஊக்குவிப்பதற்கான திறமை.
- பலதரப்பட்ட ஒழுக்காற்று குழுக்களின் வேலைகளைத் திறமையாக ஏற்பாடு செய்து முன்னெடுத்துச் செல்லும் திறமை.
- திட்ட நடைமுறைப்படுத்தல் விடயங்களை ஆராய்ந்து தீர்ப்பதற்கான திறமை.
- திறமையான தொடர்பாடல் மற்றும் கலந்தாலோசிக்கும் திறமை மற்றும் சிறந்த தனிப்பட்ட தொடர்புகள் இருத்தல் வேண்டும்.
- அரச நடைமுறைகள் மற்றும் விதிகள் பற்றி போதிய அறிவுடையவராயிருத்தல் வேண்டும்.
- கணனி அறிவு பெற்றிருத்தல்.
- ஆங்கிலத்தில் எழுதவும் கதைப்பதற்கும் உயர்மட்ட தேர்ச்சி இருத்தல் வேண்டும்.

த.லங்காநேசன்
*திட்டப் பணிப்பாளர்,*
*வடக்கு – கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்*
*திருகோணமலை.*

(சி:28701) (21-12-18)

# யாழ்.மண்ணில் கால்பதித்த டி.எச்.எல். கூரியர் சேவை

விமானம் மூலம் தருவிக்கக் கூடிய பொருள்களை மிகத் துரிதகதியில் தருவித்து விநியோகம் செய்வதிலும் அவ்வாறு வேறு நாடுகளுக்கு அனுப்புவதிலும் உலகில் முன்னணியிலுள்ள 'கூரியர்' சேவை நிறுவனம் டி.எச்.எல். இந்நிறுவனம் யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக சமூகத்தினரதும், பொதுமக்களதும் நன்மை கருதி தமது சேவையினை யாழ்ப்பாணத்திற்கும் விரிவுபடுத்தியுள்ளது. வேறு நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகள் வைத்திருக்கும் யாழ். வர்த்தகர்கள் பொருள்களின் மாதிரிகளையும் மற்றும் ஆவணங்களையும் காலதாமதமின்றிப் பெற்றும், அவ்வாறே வேறு நாடுகளுக்கு அனுப்பியும் தமது வர்த்தகத்தை மேம்படுத்திக் கொள்வதற்கு டி.எச்.எல் நிறுவனத்தின் சேவை அளப்பரியதாகும்.

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, இலக்கம் 200 என்ற முகவரியில் இயங்கும் 'கொஸ்மோஸ் சந்தைப்படுத்தல் சேவை' நிறுவனம் டி.எச்.எல். கூரியர் சேவைக்கு முகவராக யாழ்ப்பாணத்தில் செயற்படுகிறது.

டி.எச்.எல். நிறுவனம் இலங்கையில், 1980இல் "ஜோன்கீல்ஸ்" என்னும் நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின்மூலம் தனது செயற்பாட்டினை ஆரம்பித்தது. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட அதன் செயற்பாடு குறிப்பிட்ட நிறுவனத்துடன் 1992இல் மீளவும் ஏற்படுத்திக் கொண்ட ஓர் உடன்படிக்கையின் மூலம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த நிறுவனம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் மொத்தம் ஆறு இடங்களில் தனது சுங்கப் பண்டகசாலையை வைத்திருக்கின்றது.

'தமது வடிக்கையாளர்களின் நன்மையையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படுவதாக டி.எச்.எல். நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் முகாமையாளர் சமந்த ஹேவாமல்லிகா கூறியுள்ளார்.

யாழ். கொஸ்மொஸ் நிறுவனம் "ஜோன் கீல்ஸ்" மற்றும் "மக்கினொன்ஸ் அமெரிக்கன்" ஆகிய இரு நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இந்த நிறுவனம் யாழ். வாடிக்கையாளர்களின் நன்மைகருதி விமானப் பயணச் சீட்டுக்கள் வழங்கல், பயணிகள் காசோலைகள் சம்பந்தமான செயற்பாடுகள், ஹோட்டல் சேவைகள், சுற்றுலாக்களை ஏற்பாடு செய்தல் போன்ற சேவைகளையும் வழங்குகின்றது.

## தொழில் வளம்



## போரால் பாதிக்கப்பட்ட சிறுவர் வாழ்வை மேம்படுத்த உதவுமாறு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வேண்டுகோள்

கிளிநொச்சி,ஜூலை3

கடந்த இரு தசாப்தகாலமாக பேரினவாத அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தினால் தமிழ் மக்களின் சமூக கட்டுமானங்கள் சீர்குலைந்துள்ளதுடன், சிறுவர்கள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இவர்களது வாழ்வை சீர்ப்படுத்த உதவுங்கள். தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சிறுவர் நலன் திட்டம் தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போர்ச்சூழலினால் உறவுகளையும் உடைமைகளையும் இழந்து நிற்கும் சமுகத்தில் நிர்க்கதியாக விடப்பட்ட எமது சிறுவர்களைக் காப்பாற்றி அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டிய கடப்பாடு அத்தியாவசியமாகவுள்ளது.

இந்தவகையில் யாருடைய ஆதரவுமற்று நிற்கும் ஆயிரக்கணக்கான சிறுவர்களை அரவணைத்து அவர்களின் வாழ்வுக்கு ஒளியூட்டும் நோக்கோடு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சிறுவர் நலன் காப்புத் திட்டத்தின் கீழ் பல சிறுவர் இல்லங்களை உருவாக்கி செயற்படுத்தி வருகிறது.

உணவு, உடை மற்றும் உறைவிடம் என்பவற்றோடு அன்பையும் கல்வியையும் ஊட்டி ஆளுமைமிக்க ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க பல படிமுறை வேலைத்திட்டங்களை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வகுத்து சிறுவர்களின் பல்துறை ஆற்றல்களை வளர்த்து வருகின்றது.

இந்தப் புனித பணியைச் சிறப்புற முன்னெடுப்பதற்கு அனைவரின் பங்களிப்பையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வேண்டுகிறது என்றும் - அக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-5)

## ஏழாலை வடக்கு பாடசாலையை மீண்டும் இயக்க நடவடிக்கை

வலி.வடக்கு,ஜூலை3

பதின்மூன்று வருடங்களின் பின்னர் ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலை இயங்குவதற்கான முனனேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 90ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக இப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்தனர். அப்போது இப்பாடசாலையும் பாரிய சேதத்திற்கு உள்ளானது. தற்போது ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் இப்பாடசாலைக் கட்டடத்தைப் புனரமைப்புச் செய்துள்ளது. இக்கட்டடம் கடந்த வெள்ளிக்கிழமை வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனிடம் கையளிக்கப்பட்டது.

இப்பாடசாலையை உடனடியாக இயங்கச் செய்ய முடியாதபோதிலும் அடுத்தாண்டு தொடக்கம் இப்பாடசாலை இயங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆண்டு ஒன்றுமுதல் ஆண்டு ஐந்துவரையான வகுப்புகளைக் கொண்ட இப்பாடசாலையின் பதில் அதிபராக க.வாமதேவன் நியமிக்கப்பட்டுள்ளார். (ஓ-86)

# கல்வி அமைச்சின் முன் அனுமதியின்றி மாணவரின் வெளிநாட்டுப் பயணம் தடை!

## விதிமுறைகளை மீறும் அதிபர்கள் மீது நடவடிக்கை

அரசாங்கப் பாடசாலை மாணவர்களை கல்வி அமைச்சின் முன் அனுமதியின்றி வெளிநாட்டுப் பயணங்களுக்கு அழைத்துச்செல்ல முடியாது என கல்வி அமைச்சின் செயலாளர் வி.கே.நாணயக்கார அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக சுற்றறிக்கை ஒன்றை சகல மாகாண, வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அவர் அனுப்பிவைத்துள்ளார். இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கும் விதிமுறைகளை மீறும் அதிபர்களுக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரித்திருக்கின்றார்.

இவ்விதிமுறைகளின் பிரகாரம் வெளிநாட்டுப் பிரயாணங்களை ஏற்பாடு செய்யும் பாடசாலைச் சங்கங்கள், தேசிய அமைப்புக்கள் போன்றவையே மாணவர்களுக்கான பிரயாணச் செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். பிரயாணக்குழுவில் கல்வி அதிகாரி ஒருவர் கட்டாயம் இடம்பெற வேண்டும்.

அதேவேளை, வெளிநாட்டுச்சுற்றுலாவுக்கு மாணவர்களைத் தெரிவு செய்த விதம், அதன் நோக்கம் போன்றவற்றை குறித்த அமைப்பு கல்வி அமைச்சுக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் இதற்கான சம்மதத்தை பாடசாலை அபிவிருத்திச் சங்க முகாமைத்துவ சபை தெரிவிக்கவேண்டும். (ஜ)

## கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டில் மகளிரை அதிகம் ஈடுபடுத்தத்திட்டம்

வடமராட்சி கிழக்கு,ஜூலை3

கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் அதிகளவில் பெண்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழக மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவில மகளிருக்கான கண்ணிவெடி அகற்றும் பயிற்சிநெறி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் 27 பெண்கள் பயிற்சிபெற்றுவருசின்றனர்.

இவர்களுக்கு சர்வதேச தரத்திலான பயிற்சிகள் வழங்கப்படுவதுடன், சர்வதேச தொழில்நுட்ப நிறுவனங்களின் தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன.

இந்த அணியினர் பயிற்சியினை முடித்த பின்னர் வன்னிப் பிரதேசத்தில் கடந்த காலங்களில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருள்களை அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (ஒ-182)

# தகுதியற்ற சாரதிகளினாலேயே வீதி விபத்துகள் அதிகரிக்கின்றன

## சுன்னாகம் பொலீஸ் அதிகாரி தெரிவிப்பு

தெல்லிப்பழை,ஜூலை3

வாகனம் செலுத்தத் தகுதியற்ற சாரதிகளினாலேயே குடாநாட்டு வீதிகளில் விபத்துகளும் இடையூறுகளும் ஏற்படுகின்றன. இங்கு வாகனம் செலுத்துவோர்களில் சுமார் 70 வீதமானோர் வீதி போக்குவரத்து ஒழுங்குகளை அறியாதவர்களாகவே உள்ளனர்.

- இவ்வாறு தெரிவித்தார் சுன்னாகம் பொலீஸ் நிலைய வீதிப் போக்குவரத்து கட்டுப்பாட்டு பிரிவு பொறுப்பதிகாரி எம்.ஜே.எச்.புஸ்பகுமார.

குடாநாட்டில் மோட்டார் சைக்கிள்களை செலுத்தும் இளைஞர்கள் அவற்றை அளவுக்கதிகமான வேகத்துடனேயே செலுத்துகின்றனர். அதனால், அவற்றை அவர்களால் சீராகக் கட்டுப்படுத்த முடிவதில்லை. இதுவே விபத்துக்கள் ஏற்படக் காரணமாகின்றது. இவர்களில் அநேகர் சாரதி அனுமதிப்பத்திரம் பெறாதவர்கள்.

வாகனவரி அட்டை, காப்புறுதி பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாது வாகனம் செலுத்துபவர்கள் மீது தற்போது நாம் கடும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். வீதிகளில் வைத்தே அவர்களிடம் தண்டப்பணம் அறவிடுகிறோம். அவர்கள் 14தினங்களுக்குள் அந்தத் தண்டப்பணத்தைச் செலுத்தாதவிடத்து குறித்த நபர் மீது நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்கிறோம்.

எமது கட்டுப்பாட்டுப் பிரிவில் மட்டும் மாதாந்தம் சுமார் 300வீதி ஒழுங்குமீறல் தொடர்பான வழக்குகள் பதிவாகி வருகின்றன. தற்போது சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவோர் தொகை அதிகரித்து வருகின்றதாயினும்கூட அனைத்து சாரதிகளும் சாரதி அனுமதிப்பத்திரம் பெறவேண்டும். யாழ்ப்பாணத்தில் இப்பொழுது இலகுவாக சாரதி அனுமதிப்பத்திரத்தை பெறக்கூடியதாகவுள்ளது.

காலை வேளைகளில் வீதிகளில் மோட்டார் வாகனங்களைச் செலுத்துவோர் வீதி ஒழுங்குகளை மிகக் கவனமாகக் கடைப்பிடிக்கவேண்டும். இவர்கள் கண்மூடித்தனமாக வாகனங்களைச் செலுத்துவது பாடசாலை செல்லும் மாணவர்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும் பெரும் சிரமங்களை ஏற்படுத்துகிறது.

நாங்கள் இப்போது காலை 7.30 மணி தொடக்கம் 9.00 மணிவரை உடுவில், இணுவில், மல்லாகம், மருதனாமடம் பகுதிகளில் பிரதான வீதியை அண்டியுள்ள பாடசாலைகளின் முன்னால் பொலீஸாரைக் கடமைகளில் ஈடுபடுத்தியுள்ளோம். அவர்கள் வீதி ஒழுங்கைக் கவனித்து வருகிறார்கள். அப்போதும் கூட பொலீஸாரின் சமிஞைகளை கவனிக்காது தம் எண்ணத்தில் வாகனத்தைச் செலுத்தும் சாரதிகளும் உள்ளனர். இவ்வாறானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்போம்- என்றார் அவர். (ம-ரி)

### வவுனியா பொலிஸுடன் தொடர்புகொள்ள ஒருவருக்கு அழைப்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை3

முல்லைத்தீவு புதுமதலன் - ரவி குடியிருப்பில் வசித்தவரான ஆலிந்தன் என்பவரை எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, முற்பகல் 11 மணிக்கு வவுனியா பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகத்திற்கு வருகை தருமாறு வவுனியா பொலீஸ் நிலைய விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

• 1999 ஆம் ஆண்டில் முல்லைத்தீவுக் கடலில் பிரனான்டோ அன்ரனி சுதாஸ் என்பவர் காணாமற்போனமை குறித்த விசாரணை தொடர்பிலேயே இவர் அழைக்கப்பட்டுள்ளார்.(ஓ-9)

### எழுச்சிப் பேரவை அமைக்கும் பணி துரிதம்

வலி.வடக்கு,ஜூலை3

வலிகாமம் பகுதியில் கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் ஊரக எழுச்சிப் பேரவை அமைக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

சுமார் 50 எழுச்சிப் பேரணிகள் கடந்த சில நாள்களில் அமைக்கப்பட்டுள்ளன.

கிராமம் கிராமமாக இடம்பெற்று வரும் ஊரக எழுச்சிப் பேரவை அமைக்கும் நிகழ்வுகளில் அதிக எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டு வருவதுடன் தமது பங்களிப்பையும் பூரணமாக வழங்கி வருகின்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஊரக எழுச்சிப் பேரணியினரே எதிர்காலத்தில் தமது பகுதிகளின் அபிவிருத்தித் திட்டங்களை இனம் காண்பதற்கும் மற்றும் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் உதவியாக அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-86)

## இடைக்கால நிர்வாகத்தில் முஸ்லிம்கள் குறித்த யோசனை

### இன்று பிரதமரிடம் சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு,ஜூலை3

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக சபை குறித்த அரசின் திட்ட வரைபில் முஸ்லிம்கள் சார்பில் இடம்பெறவேண்டிய விடயங்கள் குறித்த யோசனைகளை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினர் இன்று பிரதமரிடம் சமர்ப்பிக்கவுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் குழுவொன்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரதமரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியது. அலரிமாளிகையில் இடம்பெற்ற இப்பேச்சுக்களில் இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைபில் உள்ளடக்கப்படவேண்டிய அம்சங்கள் குறித்தே கலந்துரையாடப்பட்டது.

இதனையடுத்தே இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்ட வரைபில் முஸ்லிம்கள் தொடர்பாக இடம்பெறவேண்டிய விடயங்கள் குறித்த யோசனைகளை சமர்ப்பிப்பதென முடிவுசெய்யப்பட்டிருக்கின்றது. (ம-5)

## 15 வீதிகளைத் திருத்த மூன்றாண்டுத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை3

யாழ். மாவட்டத்தில் உள்ள தார் வீதிகளில் 15 வீதிகளைப் புனரமைப்புச் செய்ய மூன்றாண்டுத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

திருத்தப்படவேண்டிய வீதிகள் தொடர்பான விவரங்கள் யாவற்றையும் தருமாறு சகல உள்ளூராட்சி சபைகளிடமும் யாழ். மாவட்ட அரச அதிபர் கேட்டுள்ளார்.

இதன்படி இந்த ஆண்டில் 5 வீதிகளும் அடுத்த ஆண்டில 5 வீதிகளும் 2005ஆம் ஆண்டில் 5 வீதிகளுமாக மொத்தம் 15 வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளன.

இந்த வீதிகள் யாவும் 5 கிலோ மீற்றர் நீளத்துக்கு மேற்படாதவையாக இருக்கவேண்டும். குறிப்பிட்ட வீதிகள் அடங்கும் கிராம அலுவலர் பிரிவுகள், வீதியால் பயனடைவோர் விவரம் ஆகியனவும் கேட்கப்பட்டுள்ளன. தேவை முன்னுரிமையின் அடிப்படையில் வீதிகள் புனரமைக்கப்படும். (ம-10-185)

## சாயி சிந்தனை

### கடவுள் ஒருவரே



கடவுள் ஒருவரே! அவரை நீங்கள் பல பெயர்களில் அழைக்கலாம். அவரைப் பல பெயர்களில் வழிபடலாம். நீங்கள் பாடும் பஜனைகள் ஒரே கடவுளைப் பல பெயர்களில் அழைக்கின்றன. மைசூர்பாகு, ஜிலேபி, லட்டு போன்ற இனிப்புப் பண்டங்கள் இருக்கின்றன. அந்த இனிப்புப் பண்டங்களின் பெயர்கள் வேறானவை. ஆனால், அவை அனைத்துக்கும் இனிப்புச்சுவையைத் தருவது சர்க்கரை(சீனி).

இராமர், கிருஷ்ணர், இயேசு, அல்லா, புத்தர் இவையெல்லாம் ஒரே கடவுளின் பல பெயர்கள். ஆகவே, மதங்களின் பெயரால் சண்டையிடாதீர்கள். வேறுபாடுகளை நிலைநாட்ட முயற்சி செய்யாதீர்கள். அன்பே தெய்வம். இதைத் தெளிவாகப் புரிந்துகொண்டு அதைப் புனிதமாக வைத்திருக்கவேண்டும். சுய நம்பிக்கைதான் அடித்தளம். கடவுளிடம் திட நம்பிக்கையை வளர்க்கவேண்டும்.

(ஆதாரம்:- இறைவனோடு இனிய பயணம்)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருவாளர் எஸ்.எஸ்.தங்கராஜா B.A. Dip. in Ed. S.L.P.S.-I

எமது பாடசாலை அதிபராகப் பணிபுரிந்து கொண்டிருந்த திருவாளர் எஸ்.எஸ்.தங்கராஜா B.A. Dip. in Ed. S.L.P.S.-I அவர்கள் 01.07.2003 முதல் யாழ்.கோட்டக்கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றதையிட்டு அவரை அகம்மகிழப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம்
(ஆண்கள்).

(19772) (31-14)



## நடமாடும் பிரத்தியேக வகுப்பு சேவை
## (SANTHOSH P.C.S.)

### மாணவர்களுக்கு ஒரு நற்செய்தி!

- பட்டதாரியாவதற்கு ஆங்கில பாடம் ஒரு தடையா?
- G.C.E.(A/L) கற்பவர்களுக்கு,
  - * CHEMISTRY, PHYSICS, COM.MATHS, BIO LOGY
  - * ACCOUNTS, ECONOMICS, COMMERCE
  - * TAMIL, HINDU CULTURE, LOGIC, GEOGRAPHY

  ஆகிய பாடங்களில் விசேட கற்பித்தல் தேவையா?
- தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு விசேட தயார்ப்படுத்தல் தேவையா?
- G.C.E.(O/L) கற்பவர்களுக்கு பாடரீதியான விசேட கற்பித்தல் தேவையா?
- சிங்களம் கற்க விரும்புகின்றீர்களா?

உங்கள் கல்வித் தேவையை உங்கள் வீடுகளுக்கே வந்து நிறைவு செய்யக்கூடிய சிறந்த ஆசிரியர்கள் ஒழுங்குபடுத்தித்தரப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு:

| யாழ்ப்பாணத்தில் | தென்மராட்சியில் | வடமராட்சியில் |
|---|---|---|
| Head Office<br>26, Potpathy Rd.,<br>Kokuvil.<br>T.P. 0777-758097 | * அருண் அச்சகம்,<br>சங்கத்தானை.<br>* R.ஜனன்,<br>மட்டுவில் தெற்கு,<br>சாவகச்சேரி. | S.சுதாகரன்,<br>"மாணிக்கதாரகை",<br>மனோகரா,<br>அல்வாய். |

(C/28713) (28-14-31)


## சைவ சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை3

இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபையால் நடத்தப்படும் சைவ சமய அறிவுப் போட்டிப் பரீட்சை நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9.30மணிக்கு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-6)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை3

யாழ்.மாவட்டத்தில் உள்ள கல் உடைக்கும் தொழிற்சாலைகளின் உரிமையாளர்களுக்கான கூட்டம் ஒன்று எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்று பிற்பகல் 2மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு யாழ். மாவட்டத்தில் உள்ள கல் உடைக்கும் தொழிற்சாலைகளின் உரிமையாளகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை-

திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு மாவட்ட விலை நிர்ணயக் குழுக் கூட்டமும் யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது. யாழ். அரச அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் யாழ்.மாநகர சபையின் செயலாளர், பிரதேச சபைகளின் செயலாளர்கள், தொழில நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்

(ம-8)


**ENGLISH SPOKEN AND GRAMMAR**

BY: BRITTO

புதிய பிரிவு ஆரம்பம்:
05-07-2003
சனி, ஞாயிறு 10.30 (பு.நே.)
இடம்:- கொக்குவில்
ஞானபண்டித வித்தியாசாலை
அருகில்.

(31-14) (C/28706)


## ஆசிய வங்கி நிதி உதவியுடன் 38 இடங்களுக்கு மின்விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூலை3

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் யாழ். குடாநாட்டின் மின் விநியோகப் பணிகளுக்கென 28 கோடியே 80 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த நிதியின் மூலம் குடாநாட்டில் உள்ள 38 இடங்களுக்கு மின் விநியோகம் வழங்குவதற்கான பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பணிகள் பூர்த்தியடைந்ததும் 24 மணிநேரமும் மின்சார விநியோகம் இடம்பெறும் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

(ம-10-6)


## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

அன்னையின் மடியில் 15 - 03 - 1985



ஆண்டவன் அடியில் 20 - 05 - 2003

### செல்வன் செல்லத்துரை பரணீதரன்

(யா/மத்திய கல்லூரி வர்த்தகப்பிரிவு 2004மாணவன்)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான்
பல்கலையும் கற்று பாரில் புகழ் சேர்ப்பான்
என்றிருந்த எத்தனை கனவுகள்
கண்ணில் நீர் வழியும் கற்பனைக் கோபுரங்கள்
அத்தனையும் சிதைந்து புழுதியில் நாம் புரண்டழ
பாதிவழியில் உன் பயணம் முடிந்ததடா!
விதி எழுதிச் சதி செய்து கதை முடித்த ஆண்டவனே!
அந்தோ! ஜாமத்திலே போனானே எம் பிள்ளை!
இங்கோ! துடியாய்த் துடிக்கின்றதே எம் உள்ளம்!
இறைவா! எம் துயரம் நீங்க அவனாத்மா சாந்திபெற
பிரார்த்திக்கின்றோம் உன்னை!

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (19774) (26-14-31)

துயர்பகிரும் :
- குடும்பத்தினர்.



## யா/சிதம்பரக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம் ~ வல்வெட்டித்துறை

சிதம்பரக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் மன்றத்தினால் வருடாந்தம் அளிக்கப்படுகின்ற,

**புலமைப்பரிசில் வழங்கும் வைபவமும் கல்லூரிக்கான, கணனிப்பயிற்சி நிலையத் திறப்பு விழாவும்**

காலம் : 04.07.2003 வெள்ளிக்கிழமை, முற்பகல் 11மணிக்கு
இடம் : கல்லூரி மண்டபம்

தலைமை :
கௌரவ எம்.கே.சிவாஜிலிங்கம் (நா.உ.) அவர்கள்
(வல்வை பழைய மாணவர் சங்கத் தலைவர்)

வரவேற்புரை திரு.ந.அரியரட்ணம் அவர்கள்
(கல்லூரி அதிபர்)

பிரதம விருந்தினர்கள் :
திரு V.T.செல்வரத்தினம் அவர்கள்
(வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்)
திரு.செ.தம்பிராசா அவர்கள் (பிரபல விலங்கியல் ஆசிரியர்)
திரு.க.சண்முகசுந்தரம் அவர்கள்
(பிரபல இரசாயனவியல் ஆசிரியர்)

கௌரவ விருந்தினர் ஆசிரியர் திரு.K.நல்லையா

கல்வியே கண்.........

26 மாணவர்கள் ஒரே சமயத்தில் பயிற்சி பெறக்கூடிய வசதிகளுடன் சுமார் 26 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள கணனிப் பயிற்சி நிலையத்தை பிரபல கணித ஆசிரியர் திரு.K.நல்லையா அவர்கள் திறந்து வைப்பார்கள்.

கௌரவ எம்.கே. சிவாஜிலிங்கம் (நா.உ.) அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து கிடைத்த 2லட்சத்தையும் கொழும்பு பழையமாணவர் மன்றத்தின் முயற்சியினால் கல்லூரியின் பழையமாணவர், நலன்விரும்பிகளிடம் இருந்து கிடைத்த நிதி, அன்பளிப்புகளையும் கொண்டு இப்பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஏலவே நடத்தப்பட்ட கணனிப் பயிற்சி நெறிகளில் சித்தியடைந்த சுமார் 156 மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இவ்விழாவிற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

29.06.2003

பழைய மாணவர் சங்கம்,
சிதம்பரக் கல்லூரி,
வல்வெட்டித்துறை.

SEHEDULE 'A' 2002ஆம் ஆண்டிற்கான புலமைப்பரிசில்கள் பெறுவோர் விவரம்

| வகுப்பு | பரிசில் பெறுநர் | தொகை | பரிசில் வழங்குநர் விவரம் |
|---|---|---|---|
| தரம்-6 | செல்வி தாம்பரி<br>செல்வி சி. கவிதா<br>செல்வி நிசாந்தினி | 5000<br>2500<br>2500 | திரு-திருமதி பீதாம்பரம் அவர்கள் நினைவாக அன்னாரின் புதல்வர்கள். |
| தரம்-7 | செல்வன் த. அலித்<br>செல்வன் சி.குருபரன் | 6000<br>4000 | திரு. இலிங்கரட்ணம் அவர்கள் நினைவாக திருமதி இலிங்கரட்ணமும் புதல்வர்களும் (கனடா / இங்கிலாந்து). |
| தரம்-8 | செல்வி மதுசிந்துஜா | 10,000 | திரு.குருநாதப்பிள்ளை மதனசுந்தரம் அவர்கள் நினைவாக மகன் மதனசுந்தரம் - ஸ்ரீதரன் அவர்கள் (இங்கிலாந்து). |
| தரம்-9 | செல்வன் கார்த்தீபன்<br>செல்வி இ.மணிமொழி | 5000<br>5000 | திரு.வ.மாணிக்கலிங்கம் அவர்களும் அன்னாரின் பெற்றோர் டாக்டர் சோதிலிங்கம் மாணிக்கலிங்கம் அவர்களும் பாரியாரும். |
| தரம்-10 | செல்வன் இ.சிவராம்<br>செல்வி இ.ரௌத்திரி | 5000<br>5000 | தபால் அதிபர் S.நாகமுத்து அவர்களினதும், வல்வைப் பட்டினசபை முன்னாள் தலைவர் A.திருப்பதி அவர்களினதும் நினைவாக திரு. நாகமுத்து சுப்பிரமணியம் அவர்கள் (கனடா). |
| தரம்-11 | செல்வன் சி.அருச்சுனன்<br>செல்வன் நிஷாந்தன் | 5000<br>5000 | ஜனாதிபதி சட்டத்தரணி மோதிலால் நேரு அவர்கள் நினைவாக, குடும்பத்தினர். |
| தரம்-12 | செல்வன் கு.சதீஸ்குமார் (கலை) | 10,000 | முன்னாள் ஆசிரியர் திரு. முத்துக்குமாரசுவாமி அவர்கள் நினைவாக மகன் மு.கந்தசாமி அவர்கள். |
| தரம்-12 | செல்வி சி.சுபத்திரா | 10,000 | திருமதி சுலோசனாதேவி சாந்தலிங்கம் அவர்கள் நினைவாக திரு.செ.சாந்தலிங்கம் அவர்களும் புதல்வர்களும். |

SEHEDULE 'B' தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தற்சமயம் 2003ஆம் ஆண்டு கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கான ஊக்குவிப்பு

| வகுப்பு | ஊக்குவிப்புப் பெறுநர் | தொகை | வழங்குநர் விவரம் |
|---|---|---|---|
| தரம்-6 | செல்வி இ. ரேணுஜா<br>செல்வன் ச.விஷ்வரூபன் | 5,000/-<br>5,000/- | திரு.ஆறுமுகம் கனகரத்தினம் அவர்கள் நினைவாக மகன் திரு.குணரத்தினம் அவர்கள். |
| தரம்-7 | செல்வி சி.தாம்பரி<br>செல்வி உ.நிஷாந்தினி | 5,000/-<br>5,000/- | சேவாரத்தினா அருமைச் சந்திரலிங்கம் அவர்கள் நினைவாக மகன் A. அமுதராஜன் அவர்கள் (இங்கிலாந்து). |
| தரம்-8 | செல்வன் இ.ரஞ்சித்<br>செல்வன் யோ.பாலமயூரன் | 5,000/-<br>5,000/- | திருமதி மு.அருந்தவநாயகி அவர்கள் நினைவாக மகன் மு.கந்தசாமி அவர்கள். |
| தரம்-9 | செல்வி ச.மதுசிந்துஜா<br>செல்வி இ.ரஜிதா | 5,000/-<br>5,000/- | நெடியகாடு திரு.வைரமுத்து சோமசுந்தரம் குடும்பம். |
| தரம்-10 | செல்வி இ.மணிமொழி<br>செல்வன் க.ஜனகன் | 5,000/-<br>5,000/- | திரு.திருமேனிப்பிள்ளை இராமச்சந்திரன் அவர்களின் நினைவாக திரு-திருமதி மதனசுந்தரம் ஸ்ரீதரன் அவர்கள் (இங்கிலாந்து). |
| தரம்-11 | செல்வி இ.ரௌத்திரி | 5,000/- | திரு. வ.இலிங்கரட்ணம் நினைவாக திருமதி செந்திரு. இலிங்கரட்ணம் அவர்களும் புதல்வர்களும் (கனடா, இங்கிலாந்து). |
| தரம்-12 | செல்வன் செ.சிவாரகவன்<br>செல்வன் ம.வசந்தராஜ் | 5,000/-<br>5,000/- | திரு.இராமச்சந்திரன் அங்கசிவம் அவர்கள் நினைவாக திரு-திருமதி மதனசுந்தரம் ஸ்ரீதரன் அவர்கள் (இங்கிலாந்து). |

(19769 - 31-14-)

# வெள்ள அழிவுக்கு தெற்கில் நிவாரணம் யுத்தப் பாதிப்புக்கு வடக்கில் பாராமுகம்

## கைத்தொழில் அமைச்சருக்கு மாவை எம்.பி. கடிதம்

யாழ்ப்பாணம்,ஜூலை3

தென்னிலங்கையில் ஏற்பட்ட வெள்ள அழிவினால் பாதிப்படைந்த தொழில்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கிய கைத்தொழில் அமைச்சு வடக்கில் யுத்த நடவடிக்கைகளினால் ஏற்பட்ட தென்னை அழிவுகளுக்கு நிவாரணம் வழங்காமல் புறக்கணித்துள்ளது.

- இவ்வாறு தமிழ்க் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கைத்தொழில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லைக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் கடந்தகால யுத்த நடவடிக்கைகளின்போது ஏற்பட்ட தென்னை மர அழிவுகளுக்கு அரசாங்கமோ, கைத்தொழில் அமைச்சோ இதுவரையில் எந்த உதவிகளும் வழங்காதது குறித்து விசனம் தெரிவித்து மாவை எம்பி. எழுதிய மேற்படி கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இனப்பிரச்சினை காரணமாக வடபகுதியில் நிலவும் அசாதாரண நிலைமையினால் தென்னந்தோட்ட உரிமையாளர்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு இதுவரை உதவிகள் வழங்கப்படவில்லை. கடந்த 15 வருடங்களுக்கு மேலாக தென்னைப் பயிர்ச்செய்கையை சிறப்பாக முன்னெடுக்க முடியாமையாலும் அவர்கள் சிரமப்படுகின்றார்கள். எனவே, அதற்கான நியாயமான நஷ்டஈட்டினை அவர்களுக்கு வழங்கி உதவ வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

வடபகுதியில் பெரும் பகுதியினா தென்னைப் பயிர்ச்செய்கையாளர்கள். அவர்களது வளம் சேதமடைந்தமையால் அதனை மீளமைக்க முடியாத நிலையில் அவர்கள் வருவாய் எதுவும் இன்றி அல்லற்படுகின்றனர்.

மீள்புனரமைப்பு நடவடிக்கைகள் வடக்கில் மேற்கொள்ளப்படுகின்றன எனக் கூறினாலும் தென்னைப் பயிர்ச்செய்கையைப் பொறுத்தவரையில் எதுவித முன்னேற்றமும் இல்லை.

அண்மையில் ஈராக் நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் பிரதிபலிப்பாக பாதிப்படைந்த எமது பெருந்தோட்டப பிரிவினருக்கும் - அண்மையில் எமது நாட்டில் தென்பகுதியில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தங்களினால் ஏற்பட்ட சேதங்களுக்கும் - காலம் தாழ்த்தாது தங்களது அமைச்சு நிவாரணக் கொடுப்பனவு வழங்க நடவடிக்கைகளை எடுத்தது. அதற்கு பாராட்டுக்களை இச்சந்தர்ப்பத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனினும், வடக்கில் இடம்பெற்ற யுத்தம்காரணமாக வடபகுதி தென்னை பயிர்ச்செய்கையில் ஏற்பட்ட பெருமளவிலான சேதங்களாலும் இழப்புகளாலும் சொல்லமுடியாதளவில் அல்லற்படும் தென்னைப் பயிர்ச்செய்கையாளர்கள் முற்றுமுழுதாகத் தங்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

இது எனக்கு பெரும் ஏமாற்றத்தையும் விசனத்தையும் தருகிறது.

எனவே, இதுவிடயத்தில் தாங்கள் உடனடிக் கவனஞ்செலுத்த வேண்டும் எனவும் -

தென்னைச் செய்கையாளருக்கு ஏற்பட்ட சேதங்களுக்கும் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன், அவர்கள் தமது தென்னைப் பயிர்ச் செய்கையை மீள ஆரம்பிக்கக்கூடிய வகையில் நியாயமான உதவிகள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்' எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

இது சம்பந்தமான அமைச்சரவை அங்கீகாரத்திற்கான நகல் ஒன்றினை அமைச்சரவையில் சமர்ப்பிக்குமாறும் தங்களுக்கு எனது அபிப்பிராயத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# சென். பற்றிக்ஸ் கல்லூரியில் கணனிப் பயிற்சி மையம்

## 45 ஆயிரம் கனேடியன் டொலர் செலவில் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை3

கனேடியன் தகவல் தொழில்நுட்ப நிலையத்துடன் இணைக்கப்பட்டதான கணனிப் பயிற்சி நிலையம் ஒன்று சுமார் 45 ஆயிரம் கனேடியன் டொலா செலவில் யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கணனிக் கூடத்தின் இயக்குநராக அன்ட்ரு மரியசெல்வா பணிபுரிகிறார்.

இக்கணனிக்கூடத்தில் 50 கணனிகள் வரை உள்ளன.

இந்த நிலையத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்களுக்கு இலவச அனுமதியுடனும் - ஏனைய கல்லூரி மாணவர்களுக்கு ரூபா 250 அனுமதிக்கட்டணத்துடனும் - அனுமதி வழங்கப்படும்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்களுக்கான வகுப்புகள் காலை 8.30 மணிமுதல் 2.30மணிவரை இடம்பெறும். ஏனைய கல்லூரி மாணவர்களுக்கான வகுப்புகள் பிற்பகல் 2.30மணிமுதல் இரவு 7.30மணிவரையிலும் இடம்பெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தில் கணனி தொடர்பான அடிப்படைக்கற்கை நெறிகள் 7வயது முதல் 14 வயது வரையுள்ள மாணவர்களுக்கு கற்பிக்கப்படும். அவர்களுக்கு ஆங்கிலம் மற்றும் கணிதம் தொடர்பான பாடநெறிகள் உள்ளடக்கப்பட்டிருக்கும். தரம் 6 முதல் தரம் 9 வரையான வகுப்புகளில் உள்ள மாணவர்களுக்கு 'கணனி எண்ணக்கருக்கள்' குறித்து கற்பிக்கப்படும். ஜி.சீ.ஈ.சாதாரண தர மாணவர்களுக்கு ஏ 'பிளஸ்' பரீட்சைக்குரிய கற்கைநெறிகளும் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர் களுக்கு வின்டோஸ் தொழில்சார் பரீட்சைக்குரிய கற்கை நெறிகளும் கற்பிக்கப்படவுள்ளன. (ம-9)

# சமாதானத்துக்கு அடுத்து கல்வி முன்னேற்றம் இதுவே பிரதமர் ரணிலின் சாதனை இலக்கு!

### பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழாவில் அமைச்சர் கபீர் ஹாசீம்

இந்த நாட்டில் சமாதானத்தை நிலை நாட்டுவதில் பிரதமர் வெற்றி காணுவார். அதன்பின்னர் இந்த நாட்டில் கல்வியை முன்னேற்றுவதே அவரது முதல் நோக்கமாகும்.

- இவ்வாறு பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் கபீர் ஹாசீம் கூறினார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் கூறியதாவது:-

வெளிநாடுகளில் பத்து லட்சம் இலங்கையர்கள் இருக்கிறாகள் அவர்களில் 90வீதமானவர்கள் தொழிலாளர்களாகவும், பணிப்பெண்களாகவுமே உள்ளனர். தொழில்நுட்பவியலாளர்களாகவும் உயர் தொழில் புரிபவர்களாகவும் சொற்பமானவர்களே உள்ளனர். இதற்குக் காரணம் கல்வி ரீதியாகவும் தொழில் ரீதியாகவும் காணபடும் வளர்ச்சியின்மை.

இந்த நாட்டின் வரலாற்றில் முஸ்லிம்களின் பங்கு கணிசமானது. இந்த நாட்டை ஆண்ட அரசர்களின் தளபதிகளாகவும் போர்வீரர்களாகவும் அவர்கள் இருந்துள்ளனர். மாயாதுன்ன என்ற இடத்தில் போர்த்துக்கீசருடன் நடந்த போரில் இரு முஸ்லிம் தளபதிகள் இறந்துள்ளனர். கி.மு 700 இல் அரேபியர்கள் இலங்கைக்கு வந்துவிட்டனர். இந்த நாட்டின் வளர்ச்சிக்கும் கல்விக்கும் அவர்கள் அயராது பாடுபட்டனர். இலங்கையில் பல கல்விக்கூடங்களை உருவாக்குவதில் முஸ்லிம்கள் அரும்பாடுபட்டுள்ளனர். முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பதில் அர்த்தமில்லை என சிலர் கூறுகின்றனர். அது தவறான கருத்தாகும்.

கல்வி கற்ற பெண்களாலேயே நல்ல தாயாகவும் மனைவியாகவும் இருக்க முடியும். மலேசியாவில் சட்டமா அதிபராகவும், மத்திய வங்கி தலைவராகவும் பெண்களே இருக்கின்றனர். இந்த நாடு இன்று ஒரு முக்கியமான காலகட்டத்தைச் சந்தித்துள்ளது. சமாதானம் வருமா என்று கனவு கண்டவர்கள் இன்று அதை அனுபவிக்கின்றனர். வடக்கு - கிழக்கில் எங்கு வேண்டுமானாலும் யாரும் போய் வரலாம். இந்தத் தேசம் மீண்டும் ஒரு யுத்தத்தை நோக்கிப்போகாது என்று மக்கள் நம்புகின்றனர். அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக பிரதமர் செயற்படுவார் - என்று கூறினார்.

# வைத்தியர் அனுமதியின்றி மருந்து விற்றவர் மீது சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை3

வைத்திய அதிகாரியின் அனுமதிக் கடிதம் இன்றி மருந்து விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

வடமராட்சிப் பகுதியில் உள்ள மருந்தகங்களில் அண்மையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழு மேற்கொண்ட திடீர்சோதனையின் போதே ஒரு மருந்தகத்தில் அனுமதிக்கடிதம் இன்றி மருந்து விற்பனை செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனை அடுத்துக் குறிப்பிட்ட மருந்தக உரிமையாளர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். அவரை 2 ஆயிரம் ரூபா காசுப் பிணையில் செல்வதற்கு அனுமதித்த நீதிவான் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மன்றில் ஒப்பமிடுமாறும் பணித்துள்ளார். நெல்லியடிப் பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர் க.இளங்கோ தலைமையிலான குழுவே இத்திடீர் சோதனையை மேற்கொண்டது. (ம-10)

# புளொட் அலுவலகம் மீது திருமலையில் கிரனேட் வீச்சு!

திருகோணமலை புளொட் அலுவலகம் மீது நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்டது. திருகோணமலை மின்சார நிலைய வீதியில் உள்ள புளொட் அலுவலகம் மீதே கைக்குண்டு வீசப்பட்டது.

இதனால், சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

திருமலை புளொட் அலுவலகத்திற்கு நேர் எதிரே பொலீஸ் காவலரண் ஒன்று அமைந்திருக்கின்ற சூழ்நிலையிலேயே இந்தக் கைக்குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம)

# வெடிபொருள் விழிப்புணர்வை ஏற்படுத்தும் 'இடர்கள்கெடுக' ஆற்றுகை

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் மிதிவெடி விழிப்புணர்வுக்கான கல்வியியல் செயற்பாடு இரண்டாவது ஆண்டாக இவ்வருடமும் நடைபெற்று வருகிறது.

மிதிவெடி அபாயத்தை எதிர்நோக்கிக்கொண்டுள்ள பகுதிகளில் வாழும் சிறுவர்கள் அனைவருக்கும் வெடிபொருள்களின் வடிவங்கள், வகைகள் அவை காணப்படக்கூடிய இடங்கள், ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் என்பவற்றோடு வெடிபொருள்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கு சாத்தியமான நடைமுறைகள் என்பவற்றை தெளிவாகக் கற்றுக்கொள்வதை நோக்காகக் கொண்டு இச்செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

தென்மராட்சி, வடமராட்சி, மற்றும் வலிகாமம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் இச்செயற்பாடு தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

கடந்த மே மாதம் முதலாம் திகதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள 'இடர்கள்கெடுக' என்ற தலைப்பிலான இத்திட்டத்தின் மூலம் இவ்வாண்டு இறுதிப்பகுதிக்குள் 100 பாடசாலைகளில் உள்ள சுமார் 25 ஆயிரம் மாணவர்களுக்கு இவ்விழிப்புணர்வுக் கல்வியினால் பயன் ஏற்படும் என்று உறுதியாக நம்பப்படுகிறது.

மாணவர்கள், பாலகர்கள் யாவருக்கும் ஏற்ற வகையில் இலகுவாக உணர்ந்து கொள்ளத்தக்கதாக இந்த நாடகத்தின் சொல் முறை (Telling Patterns) அமைந்திருக்கிறது. இங்கு மகிழ்ந்து கற்பதற்கான சகல அம்சங்களுடனும் இவ்விழிப்புணர்வுக்கான அறிக்கை தயார் செய்யப்பட்டிருப்பதாக யாழ்ப்பாணத்துப் பாடசாலைகளின் பெரும்பாலான அதிபர்கள் கருத்து தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. கற்றலுக்கும் கற்பித்தலுக்குமான நல்ல தொரு சூழல் அந்த 40 நிமிட நேரத்தில் ஏற்பட்டிருந்ததாக அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

உண்மையில் இங்கு ஓர் புதிய அரங்க வடிவம் பயன்படுத்தப்படுகிறது. இதனை கூடிப்பறைந்து கற்கும் அரங்கு (Theater For demonstration) என்று அழைக்கிறார்கள். இது ஒரு அரங்கு சார் உரையாடல் ஆகும். இதற்கு 'இடர்கள் கெடுக' எனப் பெயரிடப்பட்டுள்ளது. அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் செயற்றிறன் அரங்க இயக்கம் சார்பாக தே.தேவானந்த் இந்தக் கற்றல் செயற்பாட்டை நெறிப்படுத்தியுள்ளார். இவ்வரங்க ஆற்றுகை செயல் முனைப்புடன் முன்னெடுக்கப்படுகிறது.

இச்செயற்பாட்டின் ஆளுமையின் சிறப்பையும் குடாநாட்டின் தேவை'யையும் உணர்ந்து தொடரும் காலங்களில் தீவகம், யாழ்ப்பாணம் ஆகிய கல்வி வலயங்களிலுள்ள பாடசாலைகளிலும் இதனை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. பார்வையாளரும் பங்குபற்றுதல் ஊடாக ஒரு கற்றல் செயற்பாட்டிற்கு 'இடர்கள்கெடுக' ஓர் எடுத்துக்காட்டு.

மிதிவெடிகள், வெடிபொருள்கள் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் பல வகையான செயற்பாடுகளை செய்து வரும் யாழ். செயலகத்தில் இயங்கும் மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் அனுசரணையுடன் மிதிவெடி விழிப்புணர்வுக்கான செயற்பாடாக 'இடர்கள்கெடுக' ஆற்றுகை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதுவரையில் தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில உள்ள 35 பாடசாலைகளில் இவ்வாற்றுகை நடைபெற்றுள்ளது. 2 ஆயிரத்து 500 பிள்ளைகள் இதன் மூலம் பயன்பெற்றுள்ளனர். (ம)



கே.நடனசபாபதி எழுதிய "பருவமானவர்கள்" நூல் வெளியீட்டு விழா புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றத்தில் நடைபெற்ற போது, பண்டிதர் க.சச்சிதானந்தம் விமர்சன உரை நிகழ்த்துவதையும், மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.கதிரவேற்பிள்ளை, ஆயுர்வேத வைத்தியர் தும்பளை எஸ். சுந்தரமூர்த்தி, விழாவுக்கு தலைமை வகித்த, உதவித்தேர்ட்டப் பணிப்பாளர் கே.ராஜரட்ணம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். *(படம்: வடமராட்சி செய்தியாளர்)*

# 190 முன்பள்ளிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள்

வலி.தெற்கு,ஜூலை3

வலிகாமம் கல்விவலயத்துக்குட்பட்ட 190 முன்பள்ளிகளுக்கு, யாழ்ப்பாணம் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தினரால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்ட கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் மற்றும் சங்கானைக் கோட்ட பிரதேசங்களில் இயங்கி வரும் முன்பள்ளிகளுக்கு இவ்விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் திருமதி ஹேமமாலினி தலைமையில மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் வைத்து இவை வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக பணிப்பாளர் சு.ஜெயராஜ் விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய பொதிகளை வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார். இப்பொதிகள் யாவும் முன்பள்ளி ஆசிரியர்களிடம் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இவ்வைபவத்தில் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டுத் தலைவர் எஸ். சிவநேசனும் கலந்துகொண்டார். (ம-152),

# மட்டக்களப்பு ரயில் சேவை நேற்றுமுன்தினம் ஆரம்பம்

கொழும்பு,ஜூலை3

கொழும்பு - மட்டக்களப்பு ரயில் சேவை நேற்றுமுன்தினம் காலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

காலை 8.30மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்பட்ட ரயில், மாலை 5.30 மணிக்கு மட்டக்களப்பைச் சென்றடைந்தது. அந்த ரயில் மாலை 6.00 மணிக்கு மீண்டும் கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

ஏழு வருட இடைவேளைக்குப் பின்னர் புதிதாகத் தண்டவாளங்கள் அவசர அவசரமாகப் பதிக்கப்பட்டு ஏப்ரல் 12 ஆம் திகதி ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும், 24 மணி நேரத்தில் ரயில் தடம் புரண்டது. அதை அடுத்து ரயில் பாதையில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு நேற்று, மீண்டும் சேவை ஆரம்பிக்கப்பட்டது. ரயில் மணிக்கு 30 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம)

# பாராட்டி வாழ்த்துகிறோம்



நல்லூர் பிரதேச சபையில் வருமான மேற்பார்வையாளராகக் (R.S) கடமையாற்றும் எமது நண்பன்,

**திரு.கி.கொ.தேவராஜா**

அவர்களின் துணைவியார்

## திருமதி ஏ.சி.தேவராஜா

(மாலா)

*(யாழ். நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர் விஷேடதரம்)*

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டதையிட்டு அவரைப் பாராட்டி அவரின் பணி சிறக்க இணுவையம்பதி பரராஜசேகரப்பிள்ளையாரை வேண்டி வாழ்த்துகின்றோம்.

*நல்லூர் பிரதேச சபை,*
*திருநெல்வேலி.* (19773) (30-24-14) - **நண்பர்கள்.**

# யாழ்.குடாநாட்டில் முதன்முறையாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக CEFE அலகு வழங்கும்

## மீனவர்களுக்கான தொழில் முயற்சியாண்மைப் பயிற்சிநெறி

# ENTREFISH GAME

University of Jaffna
GTZ - Jaffna Rehabilitation Project
CEFE SriLanka - German CEFE Program
Department of Industries
Industrial Development Board of Ceylon

### ஏன்?

▲ வெற்றிகரமான மீனவ தொழில் முயற்சியாளராதல்
▲ பணத்தை சிறந்த முறையில் கையாளுவதற்கு
▲ இடைத்தரகர்களுடன் கொடுக்கல் வாங்கல் செய்தல்
▲ வாழ்க்கையில் புதிய முறைகளைப் பெறல்
▲ சகலவழிகளிலும் முன்னேற்றமடைதல்

### யாரை?

★ மீனவர்
★ மீனவர் கூட்டுறவுச் சங்கம்
★ மீனவருடன் தொடர்புடைய அலுவலர்கள்
★ மீனவ தொழிலுடன் தொடர்புடைய ஏனையோர்

### ஆதரவளிப்போர்...

✪ GTZ/யாழ்ப்பாணப் புனரமைப்புச் செயற்றிட்டம்
✪ இலங்கை - ஜேர்மன் CEFE நிகழ்ச்சித்திட்டம்
✪ தொழிற்றுறைத்திணைக்களம், வடக்கு - கிழக்கு மாகாணசபை
✪ கைத்தொழில் அபிவிருத்திச்சபை, வடமாகாண அலுவலகம்

பயிற்சிக்காலம் : 02 நாள்கள்
பயிற்சிப் பதிவுக்கட்டணம் : ரூ. 200/= நபருக்கு

### விண்ணப்பப்படிவம் கிடைக்கும் இடங்கள்:

✣ GTZ/ யாழ்ப்பாணப் புனரமைப்புச் செயற்றிட்டம், 472, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

✣ கைத்தொழில் அபிவிருத்திச்சபை, வடமாகாண அலுவலகம், தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கட்டடம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

✣ தொழிற்றுறைத்திணைக்களம், கச்சேரி, யாழ்ப்பாணம். (19778) (30-14)

# சமய சந்நிதியில்

வடமராட்சி,ஜூலை,3

உடுப்பிட்டி இமையாணன் நாவலடித்திடல் பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் இவ்வுற்சவம் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும் தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவுறும். (10-173)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை,3

நவாலி அட்டகிரி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும். (எ-ரி-185)

★ ★ ★

சுழிபுரம்,ஜூலை,3

தொல்புரம் வழுக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத் திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

உற்சவ தினங்களில் தினமும் மாலையில் சமயச்சொற்பொழிவு நடைபெறும். (எ-ரி-28)

★ ★ ★

சுழிபுரம்,ஜூலை,3

சுழிபுரமம், பறாளை ஈஸ்வர விநாயக ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகமும் நடைபெறும். (எ-ரி-28)

★ ★ ★

சுழிபுரம்,ஜூலை,3

பனிப்புலம் கௌரி அம்பிகா சமேத கேதீஸ்வரநாதர் ஆலய கும்பாபிஷேக தினசங்காபிஷேகம் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 11மணிக்கு நடைபெறவுள்ளது. (எ-ரி)

★ ★ ★

செம்பியன்பற்று,ஜூலை,3

தென்புலோலி புற்றலை சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (எ-36)

★ ★ ★

தென்மராட்சி,ஜூலை,3

சாவகச்சேரி, டச்சுவீதி செருக்கல்பதி சித்தி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் பத்தாம் திகதி காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பமாகி 9ஆம் திகதி எண்ணெய்க் காப்புச் சாதுதல் இடம்பெறும். (10 - 117)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை,3

துன்னாலை தெற்கு ஸ்ரீ பூதேஸ்வரர் சிவன் கோயிலின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை மறுதினம் சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை,3

அராலி வடக்கு, மயிலியற்புலம் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (10)

★ ★ ★

வலி.தெற்கு,ஜூலை,3

உடுவில் ஸ்ரீ சிவஞான விநாயகா ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்களுக்கு உற்சவம் நடைபெறும். இம் மாதம் 12ஆம் திகதி சனிக்கிழமை பகல் 10 மணிக்கு ரதோற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடமபெறவுள்ளன. (10 - 152)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை,3

தெல்லிப்பழை காசிவிநாயகர் ஆலயத்தில் கடந்த ஒருமாதத்திற்கும் மேலாக இடம்பெற்றுவந்த கந்தபுராணப்படன பூர்த்தி நிகழ்வு இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (ஒ-9)

# ஓராண்டு நினைவுகளில்....

"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்"

(தீமோத்தேயு:4-7)

பிறப்பு 24 - 04 - 1952



இறப்பு 03 - 07 - 2002

## மதியாபரணம் யேசுநாயகம்

(முன்னாள் ஊழியர் மாநகரசபை)

காலனவன் கரம்பிடிக்க
காலமிருக்கென்றிருந்தோம்
காலமிது என்றழைத்தான்
கண்ணிமைக்கும் பொழுதினிலே
கருத்தாங்கியவள் கண்ணீரும் ஓயவில்லை
கரம்பிடித்த கன்னிகையின் கதறலும் தீரவில்லை-உம்
கருவினிலே உருவான கண்மணிகள்,
கலக்கமது மாறவில்லை - ஆனாலும்
கடவுளது காலடியில்
கண்ணீரோடு இறைஞ்சுகின்றோம்,
நின் ஆன்மா சாந்தி பெற!

*6/3, மத்தியூஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (19779)(30-32-14-16) தாய், மனைவி, பிள்ளைகள், மாமி.

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா இளையதம்பி

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் நிரந்தர வசிப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா இளையதம்பி அவர்கள் நேற்று (02.07.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா-பொன்னாச்சியின் அன்பு மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவநேசன் (கனடா), சிவகங்கா, சிவசீலன், சிவதாசன் (கனடா), சிவராதிகா (2ஆம் வருட யா/தேசிய கல்வியியற்கல்லூரி ஆசிரிய மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் இந்துமதி (கனடா), சரவணபவன்(நில அளவையாளர்), வர்ணி(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுஹாசன், நிஷான், சாமினா, விபிஸ்னா, சகானா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொற்பதி வீதி,*
*நாமகள் ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்* (19777) (30-25-14-16-17) தகவல்: குடும்பத்தினர்.

## கந்தையா மகேந்திரராசா

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மகேந்திரராசா 01.07.2003 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தெய்வநாயகி தம்பதிகளின் மூத்த புதல்வரும் மகேந்திரராணி, ரவீந்திரராசா, வசந்திராதேவி, முருகமூர்த்தி (எஞ்சினியர்-சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் பிரணவானந்தன் (முரளி), செந்தமிழ்ச்செல்வி (விஜயா), விஜயவீரன்குட்டி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04-07-2003) வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெற்று, அவரது இல்லத்திலிருந்து (லக்ஷ்மி பவனம், வீரபத்திர கோயிலடி, உடுப்பிட்டி) தொண்டைமானாறு காட்டுப்புலம் மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"லக்ஷ்மி பவனம்"*
*வீரபத்திரர் கோயிலடி,*
*உடுப்பிட்டி.* (19781) (30-32-14-16-17) தகவல்: தாய், சகோதரர்கள், மருமக்கள், பெறாமக்கள்.

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## பண்ணை மீன்சந்தையை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் – 2003

யாழ்.பண்ணையில் அமைந்துள்ள மீன் சந்தையை 21.07.2003 ஆம் திகதி முதல் 31.12.2003 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரக் கட்டணம் | -ரூபா 300.00 (வற் உட்பட) |
| கேள்விப் பிணைப்பணம் | -ரூபா 5000.00 (மீளளிக்கக் கூடியது) |
| ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | -ரூபா 898676.00 (வற் நீங்கலாக) |
| கேள்விப்படிவம் வழங்கும் இறுதித் திகதி | -15.07.2003 (பி.ப.3.00 மணிவரை) |
| கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி | -16.07.2003 (பி.ப.1.00 மணிவரை) |
| கேள்விகள் திறக்கும் திகதி | -16.07.2003 (பி.ப.1.30 மணி) |

கேள்வியில் சித்தி பெறுபவர் முழுத்தொகையையும் செலுத்தி உடன்படிக்கை செய்தல்வேண்டும்.

மேலதிக விவரங்களை யாழ். மாநகர சபையில் அறிந்துகொள்ளலாம்.

*மாநகரசபை அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*2003.07.02*

(சி-28715)
(30-14)

**இ.இராமலிங்கம்**
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

# பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி தீண்டினால் பொதுமக்கள் கிளர்ச்சி

## உள்துறை பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு



பாதுகாப்பு அமைச்சில் ஜனாதிபதி கைவைத்தால், அது நாட்டின் சமாதானத்திற்கே உலை வைத்துவிடும். அபிவிருத்தி லொத்தர் சபை விவகாரம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலைப் பிரசுரிக்க விடாமல் அங்கு பணி புரிந்த மக்களே அதைத் தடுத்துவிட்டனர். அதே போன்று, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்றத்தில் அமைச்சுகளின் பொறுப்புகளில் கை வைத்தால் நாட்டு மக்களே கிளர்ந்து எழுந்து விடுவார்கள். இது நிச்சயம் - என்றார் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க.

உள்துறை அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் நிருபர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும் போதே அமைச்சர் அமரதுங்க இப்படிக் கூறினார்.

நாட்டில் உறுதியாக - ஒரு மாற்று - அரசாங்கத்தை அமைக்க வேண்டுமானால், ஜனாதிபதி தகவல்துறை அமைச்சையும், பாதுகாப்பு அமைச்சையும் பொறுப்பேற்க வேண்டும் என ஜனாதிபதியின் ஆலோசகரான அநுரா பண்டாரநாயக்க எம்.பி கூறியுள்ளார். அதேபோல், இவ விரு அமைச்சுக்களையும் ஜனாதிபதி பொறுப்பேற்றால் அரசின் நிலை என்ன என்றே நிருபர்கள் கேட்டனர். நாட்டு மக்களின் பெரும்பான்மை ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டது இந்த அரசாங்கம். அந்த வகையில் அமைச்சரவையை அமைக்கும் அதிகாரம் பிரதமருக்கே உண்டு. ஜனாதிபதியின் விருப்பப்படி எதையும் செய்யமுடியாது. ஜனாதிபதி தன்னிச்சையாக செயற்பட ஆரம்பித்தால் நாட்டு நலனில் அக்கறை கொண்ட பொதுமக்கள் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்கள்.



இப்படியான ஒரு நிலை ஏற்பட்டால், அது நாம் மேற்கொண்டுவரும் சமாதான நடவடிக்கைகளை மட்டுமன்றி, நாட்டின் அமைதியையே சீரழித்துவிடும். அத்துடன் இது ஒரு அடிப்படை மனித உரிமை மீறல் என நீதிமன்றத்திற்கும் செல்லவேண்டிய நிலைவரும் - என்றார் அமைச்சர்.

ஜனாதிபதிக்கு எதிராக நீதிமன்றத்திற்குச் செல்ல முடியுமா? என்று கேட்டபோது, அப்படி ஒரு நிலைவரும் வரை பொறுத்திருங்கள் என்று கூறிய அமைச்சர், ஜனாதிபதி நாட்டில் அமைதியைக் குலைக்க விரும்பமாட்டார் என்ற நம்பிக்கை உண்டு என்றும் கூறினார். (ம)

12 வருடங்களாக சிறைவாசம் அனுபவிக்கும்

# இரு தமிழ்க் கைதிகளுக்கும் பிணை அனுமதி கிடைக்குமா?

கொழும்பு,ஜூலை3

12 ஆண்டுகளாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவரின் பிணை மனுக்கள் தொடர்பான விசாரணை நாளை இடம்பெறும்.

வெலிக்கடை விசேட மேல் நீதிமன்றத்தில் இதுவரை விசாரணை செய்யப்பட்டு வந்த இந்த வழக்கு, சட்டமா அதிபர் திணைக்களத்தின் உத்தரவின பேரில் கிழக்கு மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது.

திருகோணமலையில் கடந்த திங்களன்று இடம்பெற்ற அமர்வில் மேல நீதிமன்ற நீதிபதி எஸ்.பரமராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே இவர்களின் பிணை மனுக்கள் தொடர்பான விசாரணையை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

ஆறுபேருக்கு மரணத்தை ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில செல்வம் லிங்கரத்தினம், தங்கராசா சிவகாந்தராசா ஆகிய இருவர் மீது அவசரகாலச் சட்டத்தின்கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வெலிக்கடை விசேட மேல் நீதிமன்றில் இவர்கள் தொடர்பான விசாரணையில் மிகமுக்கிய சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்றும் - இவர்கள் கடந்த 12 ஆண்டுகளாக விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் - இவர்கள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி கா.சிவபாலன் எடுதது்க் கூறி, அவர்களை விடுதலை செய்யக்கோரி நீதிபதியிடம் விண்ணப்பித்தார்.

முதலாவது எதிரி செ.லிங்கரத்தினம் 1992ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார் என்றும் - இரண்டாவது எதிரி அதே ஆண்டு செப்டெம்பர் 8ஆம்திகதி கைது செய்யப்பட்டார் என்றும் - சுட்டிக் காட்டப்பட்டது. அத்துடன், செல்வம் லிங்கரத்தினம் கைதுசெய்யப்படும் போது, அவரது மனைவி கர்ப்பமாக இருந்தார். இன்று செல்வம் லிங்கரத்தினத்தின் 11வயது மகன் தாயுடன் நீதிமன்றுக்கு வந்துள்ளார் என்றும் சட்டத்தரணி கா.சிவபாலன் எடுத்துக் கூறினார்.

இந்நிலையிலேயே நீதிபதி எஸ். பரமராஜா நாளை வரை வழக்கை ஒத்தி வைத்தார். அரச தரப்பில் அரச வழக்கறிஞர் எஸ்.எம்.லிம்மன் ஆஜராகியிருந்தார். (ம)

# இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் வழங்குவதன் மூலமே தீர்வை காணமுடியும்

## யாழ். வந்த அஸ்கிரிய பீட தேரர் கருத்து

வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் வழங்குவதன் மூலம் நாட்டில் தற்பொழுது காணப்படுகின்ற பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வினைக் காணமுடியும் என்று கண்டி, அஸ்கிரிய பீடத்தின் மால்கடவல புஞ்ஞசார தேரர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த இவர் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

தற்பொழுது நாட்டில் காணப்படுகின்ற இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால் விடுதலைப் புலிகளிடம் வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகத்தை வழங்கவேண்டும். இந்த இடைக்கால நிர்வாகம் பற்றியும் அதன் அதிகாரங்கள் பற்றியும் சிலர் பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றனர்.

அரசும் விடுதலைப் 'புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் நாட்டில் சமாதான ஒளிக்கீற்றுத் தெரிகின்ற போதும் சில அரசியல் கட்சிகளும், இனவாத அமைப்புகளும் சமாதான முயற்சிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் விததத்தில் செயற்பட்டு வருகின்றன. தமது அரசியல் இலாபங்களுக்காக அவர்கள் அவ்வாறு செயற்பட்டாலும் கூட தென்பகுதி மக்களும் வடக்கு - கிழக்கு மக்களும் சமாதானத்தில் முழு அக்கறை கொண்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினதும் விடுதலைப் புலிகளினதும் கருத்தினைக் கேட்டறிவதன் மூலம் அதற்கேற்றவாறு நிரந்தரத் தீர்வினை ஏற்படுத்த வேண்டுமெனவும் -

நாடாளுமன்றின் அங்கீகாரத்துடனும் அரசமைப்புக்கு அமைவாகவும் சகல இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்பட்டால் அதனை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-10)

# உலக வங்கி இலங்கைக்கு 50 வீதம் கூடுதல் நிதி உதவி

இலங்கைக்கான நிதி உதவிகளை 50 சதவீதத்தால் அதிகரிக்க உலக வங்கி உத்தேசித்திருப்பதாக அதன் முகாமைப் பணிப்பாளர் டெல்மன் சாங் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வாஷிங்ரனுக்கு விஜயஞ்செய்த அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் அவர் இதனைத் தெரிவித்தார் என்று அரச பேச்சாளர் காரியாலயம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மகாபொல புலமைப் பரிசில் நிதியை 50 வீதத்தால் அதிகரிக்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஜூலை3

அபிவிருத்தி லொத்தர் சபை நிதியில் இருந்து ஜனாதிபதி நிதியத்துக்குக் கிடைக்கும் பணத்தில் ஐம்பது சதவீதத்தை மகாபொல புலமைப் பரிசில் நிதியத்துக்கு வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழகக் கல்விக்கு அரசு வழங்கும் நிதி தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்படுவது, அடுத்த ஆண்டுமுதல் பல்கலைக்கழகங்களுக்கு இரண்டு மாணவக்குழுக்களை அனுமதிக்கவுள்ளமை ஆகியவையே நிதி ஒதுக்கீட்டை அதிகரிப்பதற்குரிய காரணங்களாகும். மகாபொல புலமைப் பரிசில் நிதியத்துக்கு வருடாந்தம் ஜனாதிபதி நிதியத்தில் இருந்து 134 கோடி ரூபா வழங்கப்படுகின்றது. அதிகரிக்கப்பட்ட நிதி அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து வழங்கப்படும் என ஜனாதிபதி செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

# பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு முன்பாக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் நேற்றுமுன்தினம் பிற்பகல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக துணைவேந்தரைப் பதவியிலிருந்து நீக்கும்படி கோரியே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. பல்கலைக்கழக மாணவர்களின் சுதந்திரத்துக்கு துணைவேந்தர் ஊறு விளைவிக்கிறார் என்பதனால் அவரைப்பதவியில் இருந்து விலக்கவேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக ஆர்ப்பாட்டக்காரர்களினால் மகஜர் ஒன்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குக் கையளிக்கப்பட்டது. (ம)

# மாகாண மெய்வன்மைப் போட்டிகள் 12ஆம் திகதிமுதல் யாழ்ப்பாணத்தில்!

யாழ்ப்பாணம்,ஜூலை3

வடக்கு - கிழக்கு மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 12ஆம் திகதிமுதல் இரு தினங்கள் யாழ்மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள கிளிநொச்சி, யாழ்ப்பாணம், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான வீரவீராங்கனைகள் இப்போட்டிகளில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

கடந்த பல் ஆண்டுகளாக இவ் விளையாட்டுக்கள் வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தை மையப்படுத்தி திருகோணமலையிலேயே நடைபெற்று வந்தன. யுத்த அனர்த்தங்களாலும், போக்குவரத்துப் பிரச்சினைகளாலும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மெய் வன்மை வீரவீராங்கனைகள் மாகாண மட்டப்போட்டிகளில் பங்குபற்றுவதில் தடங்கல்கள் ஏற்பட்டன.

நீண்ட காலத்தின் பின்னர் இப் போட்டிகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றன. யாழ்மாவட்டத்திலுள்ள வீரவீராங்கனைகள் தமது திறமையை வெளிக்கொணர இது நல்லதொரு சந்தர்ப்பமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை - இப்போட்டிகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவது பற்றிய ஆலோசனைக்கூட்டம் ஒன்று இன்று வியாழக்கிழமை முற்பகல் 10மணிக்கு யாழ். செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல விளையாட்டு உத்தியோகத்தர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் கேட்டுள்ளார். (ம-5)

# கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை உதவியுடன் கிளிநொச்சி மைதானங்கள் புனரமைப்பு

கிளிநொச்சி,ஜூலை3

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானமும், மத்திய கல்லூரி மைதானமும் மிக விரைவில் புனரமைக்கப்படவுள்ளன.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அதிகாரிகள் குழுவொன்று கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சிக்கு நேரில் விஜயம் செய்து மைதானத்தைப் பார்வையிட்டது.

இக்குழுவினருடன் புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியேற்றுகை அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவும் வந்திருந்தார்.

இப்புனரமைப்புப் பணியில் முதல் கட்டமாக வீரர்கள் ஓய்வுஅறை, பார்வையாளர் அரங்கு என்பன மைதானத்தில் அமைக்கப்படவுள்ளதோடு, மைதானமும் செப்பனிடப்படவுள்ளது. இவ்வேலைத் திட்டங்களுக்கான மதிப்பீட்டினையும், வரைபடத்தினையும் தமக்கு உடனடியாக அனுப்பிவைத்தால் தேவையான நிதியைத் தாம் விரைவில் அனுப்பிவைப்பதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ஆர்.இராசநாயகத்திடம் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை -

கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சிக்கு விஜயஞ்செய்த அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா 5 லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பாவிடம் கையளித்துள்ளார். (ம-5)

## கரும்புலிகள் நாளையொட்டி போட்டிகள்

கரவெட்டி,ஜூலை3

கரும்புலிகள் நாளை முன்னிட்டு கலிகை இளைஞர்கள் நடத்தும் விளையாட்டுப்போட்டி நாளை மறுதினம் 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

இதில் பிரதான விளையாட்டுக்களாக 40மைல் சைக்கிள் ஓட்டம், 10மைல் மரதன் ஓட்டம் என்பவை இடம்பெறவுள்ளன. (ம-70)

# மாகாணமட்ட பாடசாலை விளையாட்டு முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை3

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத்தில் 15, 19வயதுப் பிரிவுகளிலும், உதைபந்தாட்டத்தில் 17,19வயதுப் பிரிவுகளிலும் யாழ். மாவட்டப் பாடசாலை அணிகள் இரண்டாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டன.

இப்போட்டிகளின் இறுதி ஆட்டங்கள் அண்மையில் திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டரங்கில் நடைபெற்றன.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலைகளின் அணிகள் விவரம் வருமாறு:-

### கரப்பந்தாட்டம்

15வயதுப் பிரிவு:-1ஆம் இடம்- திருகோணமலை மிகிந்தபுர மகாவித்தியாலயம், 2ஆம் இடம்-யாழ். உடுப்பிட்டி அமி.கல்லூரி, 3ஆம் இடம் கல்லடி முகத்துவாரம் விபுலானந்தக் கல்லூரி.

17வயதுப்பிரிவு:-1ஆம் இடம்- அம்பாறை சேனநாயக்க மகாவித்தியாலயம், 2ஆம்இடம் - திருகோணமலை நாலந்தா மகாவித்தியாலயம், 3ஆம்இடம் - கல்லடி முகத்துவாரம் விபுலானந்தக் கல்லூரி.

19வயதுப் பிரிவு:- 1ஆம்இடம்- அம்பாறை மங்களராம மகாவித்தியாலயம், 2ஆம்இடம்-யாழ். ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம், 3ஆம் இடம்- அம்பாறை கலட்டியாகொடை மகாவித்தியாலயம்.

### உதைபந்தாட்டம்

17வயதுப்பிரிவு:- 1ஆம்இடம்- திருமலை ராஜகீய வித்தியாலோக மகாவித்தி., 2ஆம்இடம்-யாழ். கொற்றாவத்தை அமி.த.க.பாடசாலை, 3ஆம் இடம் - திருமலை கிண்ணியா மத்திய கல்லூரி.

19வயதுப்பிரிவு:- 1ஆம்இடம்- மன்னார் புனித சவேரியார் கல்லூரி, 2ஆம்இடம்-யாழ்.ஸ்கந்தவரோதயக் கல்லூரி, 3ஆம்இடம்-மன்னார் புனித லூசியஸ் கல்லூரி. (ம-5)

## நெடுந்தீவில் இன்று மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை3

கரும்புலிகள் நினைவுதினத்தை முன்னிட்டு நெடுந்தீவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்தப்படும் மெய்வன்மைப் போட்டிகள் இன்று பி.ப. 1.30 மணிக்கு நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

நெடுந்தீவு பிரதேச எழுச்சிப் பேரவைச் செயலாளர் சு.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பாவும், கௌரவ விருந்தினர்களாக யாழ்மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, அரசியல துறைதுணைப் பொறுப்பாளர் சி.செம்பியன், நெடுந்தீவு அரசியல் பொறுப்பாளர் ந.கண்ணன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான அ.விநாயகமூர்த்தி, எம்.கே.சிவாஜிலிங்கம், நெடுந்தீவு பிரதேச செயலர் சு.பேரானந்தம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

சிறப்பு நிகழ்ச்சியாக நெடுந்தீவு பிரதேச உதைபந்தாட்ட அணிக்கும், வன்னியில் இருந்து வரும் உதைபந்தாட்ட அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ ஆட்டம் ஒன்றும் நடைபெறும். (ம-5)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஸ்கூட்டர், கார் (404) என்பன விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு நாள்களில் பார்வையிடலாம். தொடர்பு: சுவாமி சித்ரூபானந்தா, பருத்தித்துறை. (19762)

மோட்டறோலா தொலைபேசி விற்பனைக்குண்டு. தொடர்பு: S.சசி, வல்வெட்டி. T.P. 070 212666 (19759)

## வீடு விற்பனைக்கு

புளியங்கூடல், மாரியம்மன் கோயில் முன் ஒழுங்கை 1/2 கிலோ மீற்றர் தூரத்திலும் வேலணை மத்திய கல்லூரியிலிருந்து 3/4 கிலோ மீற்றர் தூரத்திலும் 10 பரப்புக் காணி கொண்ட கல்வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 077 600 7833. (19708)

## கார் விற்பனைக்கு

FORD ESCORT CAR சகல ஆவணங்களுடனும் விற்பனைக்குண்டு. தொடர்பு: B.ரஞ்சன், 3ஆம் கட்டை, கலைமணி வீதி, கட்டப்பிராய். பார்வையிடும் நேரம்: தினமும் மாலை 5 மணிக்கு பின்பு. (19744)

## காணி விற்பனைக்கு

மல்லாகம் றோட், சங்கானையில் 3பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: திருமதி சி.இரத்தினம், மல்லாகம் றோட், சங்கானை (வைரவர் கோயில் அருகில்). (19741)

## தவறிவிட்டது

தங்கோடை, காரைநகரைச் சேர்ந்த சோ.நித்தியானந்தசிவம் என்பவரது விசேட அடையாள அட்டை (இல. 091303337), நேவி அடையாள அட்டை (இல. 024385) என்பன யாழ். - முகமாலை பேருந்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். பேருந்து நிலைய அலுவலகத்தில் ஒப்படைத்துதவவும். (19756)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1975இல் பிறந்த, ரேவதி நட்சத்திரம், 36 கிரகபாவம் உடைய மணமகளுக்கு சைவபோசன மணமகன் தேவை. சாதகக் குறிப்பு, முழு விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 1939, மே/பா உதயன். (19755)

## தனங்களப்பிலிருந்து பனை மரங்கள் கடத்தல்

தென்மராட்சி,ஜூலை3

தனங்களப்பு பகுதியிலிருந்து பனைமரக்குற்றிகள் அதிகளவில் இரவுவேளைகளில் வாகனங்களில் ஏற்றி வரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீதிகளில் சனநடமாட்டம் குறைந்த வேளைகளில் சாவகச்சேரி சந்தி ஊடாக வாகனங்களில் பனைமரக் குற்றிகள் கொண்டு வரப்படுவதைக் கடந்த ஒருவாரமாக தினமும் காணப்பதாகப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-117)

## சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

வடமராட்சி,ஜூலை3

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30மணிக்கு செஞ்சொற்செம்மல் இரா.கேதீசன் 'வாலிவதை' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை பேரவை உறுப்பினர் க.கந்தசாமி நிகழ்த்துவார். (ம-173)

## மாணிக்கவாசகர் குருபூசை

யாழ்ப்பாணம்,ஜூலை3

யாழ்.சைவ பரிபாலன சபையின் ஆதரவில் மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசை நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன் அகில இலங்கை திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் ஸ்ரீசட்டநாதர் சிவன்கோயிலில் வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் குருபூசையை முன்விட்டு அபிஷேகம் நடைபெறவுள்ளது. (ம-10)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரி அன்னைக்குப் புகழ்சேர்த்த பழைய மாணவனும் சங்கத்தின் முன்னாள் தலைவரும் ஆளுமை நிறைந்த நிர்வாகியுமான

## திரு.வே.வீரபத்திரபிள்ளை

அவர்கள் 02.07.2003இல் கரவெட்டி பிரதேச செயலகத்தின் பதில் பிரதேச செயலராகப் பதவியேற்றுள்ளதையிட்டு அவருக்கு எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/நெ.ம.ம. வித்தியாலயம், கரவெட்டி. - பழைய மாணவர் சங்கம்.

(சி-28696) (21-24-15-19)

---

# வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி பழைய மாணவர் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம்

தலைவர்: திரு.எம்.கே.சிவாஜிலிங்கம் (நா.உ.)
காலம்: 05.07.2003 சனிக்கிழமை
நேரம்: காலை 10.00 மணி
இடம்: வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி மண்டபம்

### நிகழ்ச்சி நிரல்

- மௌன அஞ்சலி
- தலைவர் உரை
- செயலாளரின் ஆண்டறிக்கை
- பொருளாளரின் நிதியறிக்கை
- புதிய நிர்வாகிகள் தெரிவு
- புதிய தலைவர் உரை
- பிரேரணைகள்
- எதிர்காலத் திட்டங்கள்
- பிறவிடயங்கள்

★ இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பழைய மாணவ, மாணவிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.

(19770) (21-26-15-19)

---

# கூறுவிலை கோரல்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கென ஏ-9 வீதி முறிகண்டியில் வீதியின் மேற்குப் புறமாக வீதியிலிருந்து ஏறத்தாழ சராசரி 1.5 கி.மீ. தூரத்தில் ஒதுக்கப்பட்ட காணியில் ஐந்து பெயர்ப் பலகைகள் செய்து பொருத்த கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

கூறுவிலைப் படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளர் (குடிசார்) அவர்களிடமிருந்து 09.07.2003 பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் பின்வரும் வைப்பீட்டுக்கான தொகையைப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து, பெற்றுக்கொள்ளலாம்.

☆மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா 1000/-

பூரணப்படுத்தப்பட்ட கூறுவிலைப்படிவங்கள் 10.07.2003 காலை 10.00 மணிக்கு முன் தலைவர், கூறுவிலைக்குழு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும் அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பராமரிப்புப்பகுதியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

தேவைப்படின் கூறுவிலைப்படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பராமரிப்புப் பகுதியில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி கூறுதாரர்கள் பரிசீலிக்கமுடியும்.

தபால் பெட்டி இலக்கம் 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-28708) (21-24-15-19)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 - 08 - 1922



உதிர்வு 13 - 07 - 2002

## திருமதி சிற்றம்பலம் சின்னப்பிள்ளை

திதி: 03-07-2003

காயாமல் நனையாமல் காத்துமே வளர்த்துத்
தாயாகி நின்ற தவக்கொழுந்தே!
ஓயாமல் உங்களை ஒருங்கே நினைந்துருகி
வாயாரக் கூப்பிட வைத்தனையே அம்மா!

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!

குடும்பத்தினர்
சி.சிதம்பரநாதன் (மகன்)
சமாதான நீதிவான்

பெரிய தோட்டம்,
கரவெட்டி மத்தி, கரவெட்டி. (21-15-19)

(19771)

---

# பகிரங்க அறிவித்தல்

## புங்குடுதீவு தனியார் போக்குவரத்துச் சங்கம்

மேற்படி சங்கத்தில் 01.07.2003 தொடக்கம் புதிய வாகனங்கள் பதிவுசெய்வது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

– நிர்வாகம்.

(19776)

---

# வாழ்த்தி வரவேற்கின்றோம்



யாழ். மாவட்ட செயலகத்தில் தலைமையக உதவி அரசாங்க அதிபராகப் பதவிவகித்து 02.07.2003 புதன்கிழமை கரவெட்டி பிரதேச செயலக பதில் பிரதேச செயலராகப் பதவியேற்றுள்ள

## திரு.வே.வீரபத்திரபிள்ளை

அவர்கள் ஆளுமை நிறைந்த மக்கள் சேவையில் மேன்மையுற்றுத் திகழ அவரை வாழ்த்தி வரவேற்கின்றோம்.

- கிராம அலுவலர்கள்.

பிரதேச செயலகம்,
கரவெட்டி.

(C/28697) (21-24-15-19)

---

## கொக்குவில் - நந்தாவில்

# கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய

## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்

| | | |
|---|---|---|
| 03.07.2003 | வியாழக்கிழமை | கொடியேற்றம் பகல் 10.30 மணி |
| 05.07.2003 | சனிக்கிழமை | மஞ்சத்திருவிழா மாலை 5.30 மணி |
| 09.07.2003 | புதன்கிழமை | கைலாயவாகனத் திருவிழா மாலை 5.30 மணி |
| 11.07.2003 | வெள்ளிக்கிழமை | சப்பரத்திருவிழா மாலை 5.30 மணி |
| 12.07.2003 | சனிக்கிழமை | தேர்த்திருவிழா காலை 7.00 மணி |
| 13.07.2003 | ஞாயிற்றுக்கிழமை | தீர்த்தோற்சவம் காலை 6.30 மணி (கொடியிறக்கம் மாலை 4.00மணி) |
| 14.07.2003 | பூங்காவனத்திருவிழா மாலை 5.30 மணி | |

குறிப்பு:
தேர்த்திருவிழா அன்று மாகேஸ்வரபூஜை நடைபெறும்.

-ஆலய பரிபாலன சபையினர்.

(சி-28709) (24-19-15)

---

# சுயதொழில் வேலைவாய்ப்பு மூன்று நாள் பயிற்சி



இந்தியாவிலிருந்து ஸ்கிரீன் பிரிண்டிங் தொழிலைக் கற்றுக் கொடுப்பதற்காக மூன்றாவது முறையாக யாழ். மண்ணுக்கு வருகைதந்துள்ளார் திரு.பரதன்.

தென் இந்தியாவின் அச்சுக்கலை நிபுணர் திரு.ர.பரதன் DP.Tech. அவர்கள் இயந்திரமின்றி சிறிய முதலீட்டில் தொழில்செய்யும் முறையைக் கற்றுக் கொடுக்கவுள்ளார். பொலித்தீன், ஷொப்பிங்பாக், பில்புத்தகம், விசிற் றிங்காட், ஸ்ரிக்கர், சி.டி, பேனா, கலண்டர், டயறி, திருமண அழைப்பிதழ், ரீசேட் முதலியவற்றில் இம்முறைமூலம் பிறிண்டிங் செய்யலாம். தற்போது திரு. பரதன் அவர்களைச் சந்தித்து ஆலோசனைபெற்று பயிற்சியில் சேரலாம். விரும்புபவர்கள் பெயர்களை உடன் பதிவுசெய்யவும். யாழ். நகரில் முன்னர் பயிற்சிபெற்றுத் தொழில்செய்து வருபவர்களுக்கும் ஆர்வமுள்ளவர்களுக்கும் வலுவூட்டற்பயிற்சியும் ஐயங்களை நிவர்த்தி செய்யவும் ஆலோசனை பெறவும் தனி வகுப்புகள் நடைபெறும்.

இந்திய அமைப்புகளில் கண்முன் பல திருமண அழைப்பிதழ்களையும் தயார் செய்து காட்டுகின்றார்.

☞ இன்னும் புதிய தொழில்நுட்பமும் அறிமுகம் செய்கின்றார். இதில் விருப்பம் உள்ளவர்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளவும்.

## வகுப்புகள் ஜூலை 4ஆம் திகதி ஆரம்பம்

பயிற்சி ஜூலை 4,5,6 ஆம் திகதிகளில் கீழ்க்காணும் முகவரியில் நடைபெறும்.

முகவரி:
**CAREER.COM.INSTITUTE**
இல. 89, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0777 706334, 0777 108423

Clip Arts CD யில் புதிய வரவுகள் மற்றும் டிசைன் CDகளையும் பெற்றுக்கொள்ளலாம். (19760)(21-25-19-15)

---

# மரண அறிவித்தல்

## திருமதி நடேசு அன்னம்

அரசடி, 2ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி நடேசு அன்னம் 01.07.2003 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவரான மாணிக்கம் நடேசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற குழந்தை (யப்பான்) மற்றும் சிங்கரட்ணம் (கட்டட ஒப்பந்தகாரர், பாஷையூர்), துரையம்மா, இராஜேஸ்வரி, சியாமினா, சேதா, ஜெயம் ஆகியோரின் அன்புத் தாயாரும் கனகன் (ஓய்வுபெற்ற புகையிரத ஊழியர்), தம்பித்துரை (மடோனா ஆட்டோ), சந்திரேஸ்வரன் (வவா - வாகன உரிமையாளர்), மகேந்திரன் (சேதா ஸ்ரோர்ஸ்), தங்கரத்தினம், காலஞ்சென்ற பூமலர் மற்றும் கண்மணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2003) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. தம்பித்துரை
(மருமகன், மடோனா ஆட்டோ)

44/10, மணல்தரை லேன்,
கந்தர்மடம். (19865)(21-15-19)

# தும்பளை நாவலர் வி.க. சம்பியன்

வடமராட்சி,ஜூலை3

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய மு. இரத்தினசாமி ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெற் சுற்றுப்போட்டியில் தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம் வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகம், கரவெட்டி அத்துளு அம்பாள் விளையாட்டுக் கழகத்தை 5ஓட்டங்களால் தோற்கடித்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நாவலர் விளையாட்டுக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 22 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 71ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பதிலுக்கு 72ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய அத்துளு அம்பாள் விளையாட்டுக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களின் நிறைவில் 9விக்கெட்டுக்களுக்கு 66 ஓட்டங்களைப் பெற்று 5ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

(ம-5)

## கரபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்3

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கிடையில நடைபெற்றுவரும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

❖ பிற்பகல் 3மணிக்கு - ஆவரங்கால் விவேகானந்தா சனசமூகநிலைய அணி எதிர் அச்சுவேலி விக்கினேஸ்வரா சனசமூக நிலைய அணி.

❖ பிற்பகல் 4.00மணி - கோப்பாய விக்கினேஸ்வரா சனசமூகநிலைய அணி எதிர் ஆவரங்கால் மத்தி சனசமூக நிலைய அணி.

(ம-5)

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை3

'அட்வென்டிஸ்ட்' சர்வதேச முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி, இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக போதகர் ஜோர்ச் வம்பீக் பங்கேற்கிறார்.

(ஓ-9)

# பாடசாலை நேரத்தில் காயமடையும் மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பு

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரி வட்டாரம் தகவல்

பாடசாலை நேரத்தில் காயமடைந்து ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறும் மாணவர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருவதாக தெல்லிப்பழை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தினந்தோறும் சராசரியாக ஆறு தொடக்கம் 10 வரையான மாணவர்கள காயங்களுக்காக சிகிச்சை பெற குறிப்பிட்ட வைத்தியசாலைக்கு வருகின்றனர் என்றும் -

நேற்றைய தினம் மட்டும் சுமார் 15 வரையான மாணவர்கள் இவ்வாறு சிகிச்சை பெற்றுள்ளனர் என்றும் - அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

விளையாடும் போது விழுதல், மரங்களில் ஏறி தவறி விழுதல், தளபாடங்கள் மீது மோதி விழுதல், கூரிய பொருள்களால் காயங்களுக்கு இலக்காதல் போன்ற காரணங்களால் மாணவர்கள் காயமடைகின்றனர் என்றும் - கூறப்பட்டது.

(எ-ரி)


**கலைப்பீட 3ஆம் வருட பொதுக்கலை மாணவர்களுக்கான அறிவித்தல்**

விடயம் :- குழுப்படம் பிடித்தல்
காலம் :- இன்று (2003-07-03) வியாழன்
நேரம் :- பி.ப.4.30
இடம் :- பரமேஸ்வரன் ஆலய முன்றில்

அனைவரும் தவறாது சமுகந்தரவும்.

(19791) (28-14-16) -கலைப்பீட மாணவர் ஒன்றியம்.


# முதலாம் ஆண்டு நினைவு



**தங்கராசா பொற்கொடி**

மலர்வு : 02-10-1938
உதிர்வு : 13-07-2002
திதி : 03-07-2003

*சீரிய அன்புதனை*
*சிறப்புடனே எமக்களித்து*
*கவலைகள் நாம் மறந்து*
*கண்ணியமாய் வாழ வழி காட்டினீர்!*

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தில்லையம்பதி,
கோண்டாவில்.
(19795) (28-14-16)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தவமணி கிருஸ்ணபிள்ளை

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் மாம்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி கிருஸ்ணபிள்ளை அவர்கள் நேற்று (02.07.2003) புதன்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இலட்சுமி, திருநாவுக்கரசு(நகரசபை, நாவலப்பிட்டி), காந்தாமணி வரதராஜா(தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை) ஆகியோரின அன்புச் சகோதரியும் சந்திரவதனா, மதிவதனா(கனடா), நீலவண்ணன் (கனடா), லதவதனா, சத்தியவதனா(கனடா), ஜெயவதனா(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் குலசேகரம்(லங்கா சிமென்ற் லிமிட்டெட்), யோகராஜா(கனடா), உருத்திரன்(மின்சாரசபை), ரூபதாஸ்(கனடா), சுந்தர் (ஜேர்மனி), கௌரி(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் மித்துன், கௌசி, லேகா, ஸர்னா, ஸ்ரெபன், ஹரின், விவேக்கா, துஷானா, துவாரகன், சமீர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற விஸ்வலிங்கம், காலஞ்சென்ற ஜெயமலர், கிருஸ்ணமூர்த்தி, இரஞ்சினிதேவி, மகேஸ்வரி, சங்குவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.07.2003 அன்று கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அளவாவோடை,* தகவல் :
*மல்லாகம்.* (19794) (31-28-14-16) ந.உருத்திரன்.

## சின்னப்பு நாகரட்ணம்

சந்திரவளவு, துன்னாலை தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட சின்னப்பு நாகரட்ணம் கடந்த 30.06.2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் கனகம்மாவின் அன்புக் கணவரும் செல்வகுமார், விஜயகுமார்(சுவிஸ்), உதயகுமார்(நோர்வே), சந்திரகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் தயாளினி, சிவரூபி, சாரதாமலர், சுந்தரமோகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.07.2003) வியாழக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக புட்டிதூ மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்திரவளவு,* தகவல்:
*துன்னாலை தெற்கு,* நா.செல்வகுமார்.
*கரவெட்டி.* (19790) (32-28-14-16) (மகன்)

## ஆசைப்பிள்ளை கிருஸ்ணமூர்த்தி

(நஷனல் அன் கிறின்லேஸ் வங்கி)

காரைநகர், மாப்பாணபுரியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட ஆசைப்பிள்ளை கிருஸ்ணமூர்த்தி நேற்று (02.07.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை - சீதேவிப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பரமநாதர் - சின்னம்மாவின் மருமகனும் புனிதவதியின் அன்புக் கணவரும் விக்கினேஸ்வரன், ஞானேஸ்வரன், ஞானேஸ்வரி ஆகியோரின் தகப்பனாரும் சாந்தலக்சுமி, சத்தியதேவி, வல்லிபுரநாதர் ஆகியோரின் மாமனாரும் விதுரா, விபூசன், ரவிசங்கர், டினேஸ், சரண், சர்மிளா ஆகியோரின் பேரனும் ரேனுசா, நிதுசன், வினுசன் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2003) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கி.ஞானேஸ்வரன்,
*334/1, கோயில் வீதி,* கி.விக்கினேஸ்வரன்.
*நல்லூர்.* (19789) (32-28-14-16) (பிள்ளைகள்)


**லஷ்சுமி சினிமா** இணுவில்

விஜயகாந்த், சௌந்தர்யா, கவுண்டமணி, செந்தில் நடித்த

**சொக்கத்தங்கம்** (ரீலிஸ்)

காட்சி நேரம்: 11.00,3.00,7.00 (பி.நே.) (C/28663) (28-14-16)

**நாகம்ஸ்** சுன்னாகம்

முரளி, தேவயானி, அப்பாஸ், ஆனந்தராஜ் நடித்த

**காதலுடன்** (ரீலிஸ்)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பி.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு விசேடகாட்சி 7.00 (பி.நே.)
(C/28682) (28-14-16)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

சத்தியராஜ், ரம்பா, செந்தில், கபாலி, மணிவண்ணன் நடித்த

**மிஸ்ரரி**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
தினசரி இரவு 8.45 இற்கு
**THE BOURNE IDENTITY**
(C28685) (28-14-16)

**லிபேட்டி** அச்சுவேலி

எம்.ஜி.ஆர்., ராதாசலூஜா நடித்த

**இதயக்கனி** (ரீலிஸ்)

காட்சி நேரம் 3.00, 7.00(பி.நே)

**RED DRAGON** (ரீலிஸ்)
தினசரி காலை 11.00 மணிக்கு (காட்டூன்படம்)
(C/28683) (28-14-16)

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு.



ஆம்திகதி வரை
**ஏய்** (ரீலிஸ்)
சரத்குமார், ஜெயராம், மீனா, ரம்யாகிருஷ்ணன்
நேரம் 10.30,2.30,6.30 (பி.நே.)
சனி, ஞாயிறு இரவு 9.30
(28-14-16)


# பணிநிலை வெற்றிடம்

**01) ஆசிரியர்கள் பணிநிலை**
சகல பாடங்களுக்குமான ஆசிரியர்கள் தேவை (தரம 01 - A/L வரைக்கும்) பயிற்றப்பட்டவர்கள், பட்டதாரிகள், கற்பிக்க வல்லமையுடையவர்கள் (A/L-கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம்)

**02) அலுவலக பணிநிலை**
கணக்காளர், தட்டெழுத்தாளர், கணனியாளர்

**03) பராமரிப்பாளர்கள் பணிநிலை**
10 வயதிற்குட்பட்ட சிறுவர்களைப் பராமரிப்பதற்கு 35வயதிற்கு மேற்பட்ட பெண்கள் தேவை. க.பொ.த. உயர்தரம் வரை படித்திருக்கவேண்டும்.

**04) தொடர்பாளர் பணிநிலை**
30வயதிற்கு மேல் உள்ளவராகவும் தரம் 8ஆம் வகுப்பிற்கு மேல் படித்திருக்க வேண்டும்.

**05) சாரதி பணிநிலை**
உழவு வேலை செய்யக்கூடிய வகையில் சாரதி தேவை 30வயதிற்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும்.

**06) விவசாயப் பணிநிலை**
3வருடத்திற்கு மேல் விவசாயப் பயிர்ச்செய்கை அனுபவம் உள்ளவராகவும் 30வயதிற்கு மேல் இருக்கவேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி:-16-07-2003 அன்றுக்கு முன்பு

**காந்தருபன் அறிவுச்சோலை**
சிறுவர் இல்லம்,
கைவேலி,
புதுக்குடியிருப்பு. (C/28717) (28-14-16)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 487 |
| திகதி | 01.07.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
4026849-4040607

வெற்றி இலக்கங்கள் **27 36 45 47**

லக்கினம் கடகம்



ஜக்பொட் பரிசு
ரூபா. 3,003,100/-
வெல்லப்பட்டுள்ளது.

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,000,000/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 307,494 | 10 | 3,074,940 |
| 2 இலக்கங்கள் | 28,259 | 20 | 565,180 |
| 1 இல + லக்கினம் | 28,009 | 30 | 840,270 |
| 2 இல + லக்கினம் | 2,564 | 100 | 256,400 |
| 3 இலக்கங்கள் | 754 | 500 | 377,000 |
| 3 இல + லக்கினம் | 68 | 5,000 | 340,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 3,003,100 | 3,003,100 |
| மொத்தம் | 367,152 | - | 8,756,890 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 8,756,890/-

தொடர் இல. 5026913க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 ஜூலை 04ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

4032247-7-08
4039007-1-04
4037029-9-72
4031925-9-92
4039499-0-36

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக). யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

# பஸ் டிப்போ ஊழியர் மயங்கி வீழ்ந்து மரணம்

யாழ்ப்பாணம்,ஜூலை3

காரைநகர் பஸ்டிப்போவில பணியிலிருந்த ஊழியர் ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார் என்று கூறப்படுகிறது.

நேற்று மாலை 4 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

காரைநகர் டிப்போவில் பணிபுரியும் மந்திப்புலம், காரைநகரைச் சேர்ந்த சுப்பிரமணியம் கனகராசா (வயது 39) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் கடமையில் இருந்த சமயம் டிப்போவில் உள்ள தேநீர்க்கடையில் தேநீர் குடித்துவிட்டு வெளியேறியபோது தனக்கு தலை சுற்றுவதாக சக ஊழியர்களிடம் தெரிவித்த சிறிது நேரத்தில் மயங்கி வீழ்ந்தார் எனக் கூறப்பட்டது.

உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட போதும் அவர் இறந்து விட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-12)

## விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

மண்டைதீவு,ஜூலை3

தீவகக்கல்வி வலயத்தில் தரம் 7 தொடக்கம் 11வரை விஞ்ஞான பாடத்தைப் போதிக்கும் சகல ஆசிரியர்களுக்குமான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 1 மணிக்கு தீவக கல்வி வலயத்தில் இடம்பெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-4-88)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாவட்ட மட்டத்திலான நிகழ்வுகள் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா பூந்தோட்டம் பகுதியில் நடைபெறும் என மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார். (எ-164)

## குற்றச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையங்களில் ஆரம்பித்துவைக்கப்படும். இது கொழும்பிலுள்ள சகல பொலீஸ் நிலையங்களுக்கும் விரைவில் விஸ்தரிக்கப்படும் - என்று அவர் கூறினார்.

இந்த சைக்கிள் ரோந்து சம்பிரதாயபூர்வமாக நேற்று கிருலப்பனை பொலீஸ் நிலையத்தில் வைத்து சிரேஷ்ட பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, பிரதிப் பொலீஸ்மா அதிபர் போதிலியனகே ஆகியோரால் ஆரம்பித்துவைக்கப்பட்டது. (எ)

## கொலைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரில் பலர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் மூன்று பேர் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது. அந்த வழக்கு விசாரணைகள் கடந்த 12 வருடங்களாக அம்பாறை மாவட்ட நீதிமன்றத்திலும், மேல்நீதிமன்றத்திலும் இடம்பெற்று வந்தன.

மேற்படி நபர்கள் மூவரும் குற்றவாளிகள் என வழக்கு விசாரணைகளில் தெரியவந்ததையடுத்து மூவருக்கும் நீதிபதி மரணதண்டனை விதித்தார். (ஜ-4-12)

## தாப்ரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலமாக உறவுகளைக் கொண்டுள்ளார். அந்த கொலையின் மர்மங்கள துலங்கிவருகின்றன. காலப்போக்கில் உண்மை விடயம் தெரியவரும். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் சமாதான முயற்சிகளில் குந்தகம் விளைவிக்கக்கூடாது என்று அதன் உறுப்பினர்களுக்கு கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அண்மைக்காலங்களில் இடம்பெற்றுவரும் கொலைகள் தொடர்பான சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பதில் எமது புலனாய்வுப் பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் நாம் உறுதியாகவிருக்கிறோம். கொலைகளின் பின்னணி குறித்து காலப்போக்கில் தெரியவரும். எம் மீது வீண் பழிசுமத்தப்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் - என்று கூறினார் அவர். (ஐ)

## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காக அது நோர்வே விசேட பிரதிநிதியான வெஸ்ட்பேர்க்கிடம் கையளிக்கப்படும். இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு திட்ட வரைவுடனேயே வெஸ்ட்பேர்க் கிளிநொச்சி செல்வார்.

இதற்கிடையே, விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துக்கும் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையே அடுத்த வாரத்தில் முக்கிய பேச்சுக்கள் இடம்பெறவிருக்கின்றன எனவும் அறியப்படுகிறது.

ராஜதந்திர வட்டார தகவல்களின்படி, இப்பேச்சுக்கள் கிளிநொச்சியில் அல்லது லண்டனில் நடைபெறும் எனத் தெரியவருகிறது. லண்டனிலிருக்கும் அன்ரன் பாலசிங்கம், கிளிநொச்சிக்கு வருவதற்கு அவரது உடல் நிலை இடமளிக்காது போகுமேயானால் தமிழ்ச்செல்வன் லண்டன் செல்வார் என்று ராஜதந்திர வட்டாரத் தகவல்கள் கூறுகின்றன. (ஜ-4-12)

# அரசகட்டுப்பாட்டுப்பகுதிக்குள் வருவோர் மீது தீவிர சோதனை

மட்டக்களப்பு,ஜூலை3

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் இருந்து இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதிக்கு வரும் மக்கள் மீது படையினர் தீவிர சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் - என்று தெரிவிக்கப்படுகிறது.

அம்பலாந்துறை - குருக்கள்மடம் படகுச்சேவை மூலம் அரசகட்டுப்பாட்டுப்பகுதிக்குள் வருவோர் மீது கடந்த சில தினங்களாக மீண்டும் தீவிரசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கென குருக்கள் மடம் பகுதியில் சோதனைச்சாவடி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

முன்னரும் இதே இடத்தில் வைத்து படையினர் தமது சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்த போதிலும், யுத்தநிறுத்தம் ஏற்பட்ட பின்னர் அவையும் நீக்கப்பட்டிருந்தன.

தற்போது சோதனை நடவடிக்கைகளை படையினர் மீண்டும் ஆரம்பித்திருப்பது குறித்துமக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர். (ஜ-4-12)

# போர் நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றிச்செல்லும் புலிகளின் கப்பல்களை வழிமறித்துத் தாக்கி மூழ்கடித்துவிட்டு அவை ஆயுதங்களுடன் ஸ்ரீலங்கா கடற்பரப்புக்குள் நுழைந்தன என்று புலிகள் இயக்கம் மீது பழிசுமத்துகின்றது. புலிகளின் கடல்கலங்கள் மீது சந்தேகம் ஏற்பட்டால் கண்காணிப்புக் குழுவினரை அழைத்து அவர்கள் கண் முன்னால் சிங்களக் கடற்படை தனது சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளலாம் என்று திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட்டது. ஆயினும், சிங்களக் கடற்படை எதேச்சாதிகாரமாகத் தொடர்ந்தும் புலிகளின் கப்பல்களைத் தாக்கி வருகின்றது. சர்வதேசக் கடற்பரப்பில் இரண்டு கப்பல்களை அதன் மாலுமிகளுடனும் பொருள்களுடனும் தாக்கி மூழ்கடித்துள்ளது. நெடுந்தீவுக் கடலில் கடல் படகு ஒன்றின் அழிவிற்கும் மூன்று கடற்புலிப் போராளிகளின் சாவுக்கும் காரணமாகவும் இருந்துள்ளது. அத்துடன், வடக்கு - கிழக்கு கரையோர மக்களின் தொழிலுக்கு தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டும் அவர்களது சொத்துக்களை அழித்தும் அப்பட்டமான போர்நிறுத்த மீறல்களைச் செய்து வருகின்றது. இதுபோல சிங்கள இராணுவமும் தமிழர் தாயகப் பகுதியெங்கும் போர்நிறுத்த மீறல்களில் ஈடுபட்டு வருகின்றது. உடன்பாட்டுக்கு முரணாக ரோந்துகளையும் வீதிச் சோதனைகளையும் மேற்கொண்டும், காவலரண்களை இராணுவத் தளங்களை புதிதுபுதிதாக அமைத்தும் போர்நிறுத்த உடன்படிக்கையை கேலிக்கிடமாக்கி வருகின்றது. படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள புலிகளின் அரசியல் அலுவலகங்களை சுற்றிவளைப்பதும் உள்நுழைந்து சோதனையிட முயல்வதும் போர்நிறுத்த மீறலாகும்.

அதேபோல, படையினரின் போர் நிறுத்த மீறல்களை அந்தந்த இடங்களிலேயே கண்டித்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் மக்களை, இராணுவம் பயமுறுத்தியும் சில சமயங்களில் தாக்கியும் வருகின்றது. அம்பாறை மாவட்டத்திலும், திருமலை மாவட்டத்திலும் படையினர் செய்த படுகொலைகள் அனைவரும் அறிந்ததே. மட்டக்களப்பில் அரசியல் பணியில் ஈடுபட்டிருந்த போராளி ஒருவரைக் கைதுசெய்து சிங்கள நீதிமன்றில் நிறுத்தி தடுத்துவைத்துள்ளனர். சிங்கள வான்படையின் வேவு விமானங்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது பறந்து வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு ஒப்பந்த மீறல்களைப் புரிந்துவருகின்றன.

இவ்விதம் சிங்கள அரசின் முப்படைகளும் பாரபட்சமின்றி போர் நிறுத்த மீறல்களில் ஈடுபட்டு அமைதிப் பேச்சை சீர்குலைத்து வருகின்றன. இதைத் தடுத்து நிறுத்த முடியாமலும் விரும்பாமலும் சிங்கள அரசும் உள்ளது. இந்நிலையில், சமாதான முயற்சி என்பது சிங்களத் தரப்பால் கைவிடப்பட்ட தொன்றாகவே காணப்படுகின்றது.

இவ்வாறு 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை தெரிவித்துள்ளது. (ஜ-8-12)


வட இலங்கையில் முதன் முதலாக சீவல் ஐஸ் (FLAKE ICE) அறிமுகம்

மீன், இறால் போன்ற கடல் உணவுகளை சர்வதேச தரத்துக்கு ஏற்ற முறையில் குளிர் பதனிட மேற்கத்தேய நாடுகளில் பாவிக்கப்படும் சீவல் ஐஸ் இப்போது யாழ். நகரில் எம்மால் உற்பத்தி செய்து வழங்கப்படுகிறது.

சிறப்பு நன்மைகள்

அ. சீவல் ஐஸ் உருவத்திலேயே சீவல் வடிவில் தயாரிக்கப்படுவதால் மிக நீண்ட நேரம் உருகாத தன்மை பெற்றுள்ளது.

ஆ. சீவல் ஐஸ் கூரிய முனைகளற்றதால் மீன், இறால், கணவாய் போன்ற கடலுணவுகளின் மென்மையான மேற்பரப்புகளை குத்தி சேதப்படுத்தாது அவற்றின் உயிரியல் நிலையிலேயே பேணும் வல்லமை உள்ளது.

இ. சீவல் ஐஸ் சீரான வடிவுள்ளதால் கடலுணவுகளை குளிர் பதனிடும் போது அவற்றின் கூடிய மேற்பரப்பில் அது பரந்து வியாபித்திருந்து கடலுணவுகளை சர்வதேச தரத்துக்கேற்ப குளிரூட்டி நீண்ட நேரம் பாதுகாக்கின்றது.

ஈ. கடலுணவுகளின் மென்மையான மேற்பரப்பு சேதமடையாமல் பேணப்படுவதால் ஏற்றுமதி சந்தையில் சீவல் ஐஸ் பாவித்து குளிரூட்டிய கடல் உணவுகளுக்கு அதி கூடிய விலை கிடைப்பதன் மூலம் கூடிய இலாபம் ஈட்டலாம்.

உ. பழைமை முறைப்படி ஐஸ் கட்டிகளை உடைத்து பாவிப்பதை விட சீவல் ஐஸ் பாவிப்பதன் மூலம் ஐஸ் செலவினத்தை 20% தொடக்கம் 25% வீதத்தால் குறைக்கலாம்.

புறோமோட்டர்ஸ் எஞ்சினியரிங் கம்பனி லிமிடெட்

தலைமை அலுவலகம் : 844, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.இல. : 222-5780.

பனிக்கட்டி ஆலை : 651/2, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

(சி-28712) (30-14-16-17-31)



இணைந்த கணிதம்

பிரத்தியேக வகுப்புகள்

தொடர்பு : 0777-110295

(19793) (30-16-14-17)



ஆள் தேவை

ஓவ் செற் (ஹமாடா) மெசின் இயக்கத் தெரிந்தவர்கள்தேவை. நேரில் வரவும்.

சாந்தி கணனிசார் சேவைகள்

150, பாங்சூஸல் வீதி, யாழ்ப்பாணம்.

(19616) (30-17-16-14-32)



எமது இன்றைய புதிய வீடியோ CD வெளியீடு

ஜெயம்

T.P. 0777-178155

0777-964913

(19793) (30-16-14-17)



ஞானோதய அக்கடமி சங்கத்தானை சாவகச்சேரி

A/L Day Class

CHE. : அன்பழகன்

PHY. : கருணாநிதி

C.MATHS : - ராஜன்

ஆரம்பம் 03.07.2003

வியாழன் 8a.m.

(19792)(30-31-14-16)



பொருளியல் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

பொருளியல்

S.வரதராஜன்

A/L 2004

9 - 10 சர்வதேச பொருளியல்

12 - 1 பணம் வங்கி

A/L 2005

10 - 11 நெகிழ்ச்சிக் கோட்பாடு

ஆரம்பம்: 05.07.2003(சனி)

(30-17-14-16-12) (19647)



ஈசன் கல்வி நிலையம்

இரசாயனவியல்

(30-12-14-16-17)

A/L 2005 PAPER CLASS

அலகு ரீதியான வினா—விடை வகுப்பு

திரு.சிவத்திரன் (B.Sc.)

ஆரம்பம்:04.07.2003

FRI: 5.30p.m.

(19734)



யாழ். மக்களுக்கு ஓர் அறிமுகம்! CD-DAWN

HERO HONDA World No. 1 Two-Wheeler Company



2 Year warranty

HERO HONDA LEGENDARY MILEAGE

யாழ். நகரில் விலை 82,000 ரூபா மட்டுமே!

RG இரத்தினகோபால்ஸ்

63,65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

021 222 6185 ☎ 0777 340056

(C/28716) (22-14-30)



IBMS

ஆரம்பம்:- ஆங்கிலம்

Diploma In General English

Lectures By :- Mr. S. Pathmanathan

B.A Dip. in ELT (University of Reading,UK)

Rtd. Principal, Palaly Teachers Training College.

அனுபவம்மிக்க ,தகுதிவாய்ந்த ஆசிரியர் ஊடாக கற்பதன் மூலமாக நீங்கள் சிறந்த அறிவை பெறுவீர்கள் என்பது உறுதியானது.

விபரங்கள் அலுவலகத்தில்

Certificates Award Ceremony 2003

எமது நிறுவனத்தில் கற்கைநெறிகளை பூர்த்தி செய்துள்ள மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் மிக விரைவில் நடைபெற உள்ளது. அதற்கான விண்ணப்பப் படிவங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ்விண்ணப்பப் படிவங்கள் கிடைக்காதமாணவர்கள் 10-07-03க்கு முன்பதாக நிறுவனத்துடன் தொடர்புகொள்ளவும்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிரைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.07.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.